சந்தா ரூ. 1-8-0.

ஸ்ரீ:



OF THE REGISTRAR OF BOOKS
17 NOV 1939
MADRAS

DIGITIZED

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி

# ஸம்ரக்ஷிணீ

(மாதப் பத்திரிகை.)

ஸம்பாதகர்—பரவஸ்து. ஸ்ரீநிவாஸாசாரியர்

ஸம்புடம் 2 — ஸஞ்சிகை 8
1939ஆ ஆகஸ்டு மீ [ ஆவணி மீ

M39·2·8
210826

## விஷய அட்டவணை.

1. கண்ணனுக்கே யாமது காமம்—ஸ்ரீ. தி. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி.
2. ஸாமரஸ்ய ரஹஸ்யம்—ஸம்பாதகர்.
3. மாதர்களும் மாதவனும்—ஸம்பாதகர்.
4. யாதவாப்யுதயம் (தமிழ் உரை)—ஸ்ரீ ஏ. வி. கோபாலாசாரியர் ஸ்வாமி.
5. ந்யாயபரிசுத்தி—ஸ்ரீ மதுராந்தகம் - வீரராகவாசாரியர்ஸ்வாமி, சிரோமணி.
6. ஸ்ரீரகுவீரகத்ய ஸாரம்—ஸ்ரீ தி. ஈ. சடகோபாசார்யா ஸ்வாமி.

---

## ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணிக்கு ரூ. 5 கொடுத்துதவிய ப்ரமுகர்கள்.

1. ஸ்ரீ உ.வே. T. S. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி, டிஸ்ட்ரிக்டு போர்டு அஸிஸ்டெண்ட் என்ஜினீயர், மாயவரம்.
2. ,, கொடியாலம் K. துரைஸாமி அய்யங்கார் ஸ்வாமி, ஸீனியர் ஸூபரின்டெண்டண்டு, ஸரோஜினி தெரு, மாம்பலம்.
3. ,, புதுக்கோட்டை A. V. ரங்கராஜய்யங்கார் ஸ்வாமி, லேபர் ஆபீஸர், ஆமதாபாத்.
4. ,, ராவ்பஹதூர் K. N. நரஸிம்மாசாரியர் ஸ்வாமி, அஸிஸ்டண்ட் டைரக்டர் ஆப்ஸர்வே, வடகோபாலபுரம்.
5. ,, ஸ்ரீசைல கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி, ஜோடிதார் ஸோஸலே. மைஸூர்.
6. ,, V. விஜயராகவாசாரியர் ஸ்வாமி, போஸ்டுமாஸ்டர், பம்பாய்.
7. ,, U. ரங்கஸாமி அய்யங்கார் ஸ்வாமி, அஸிஸ்டண்ட் என்ஜினீயர், கோட்ஸ் ரோட், மாம்பலம்.
8. ,, K. R. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி, ரிடையர்டு கௌன்ஸில் மெம்பர், பெங்களூர்.
9. ,, E. R. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி, ரிடையர்டு என்ஜினீயர், ஹெட்வார்டு எலியட்ஸ் ரோட், சென்னை.
10. ,, C. R. கிருஷ்ணமாசாரியர்ஸ்வாமி, அட்வகேட், திருப்பாபுலியூர். இவர் ரூபாய் 25 உதவி யிருக்கிறார்.
11. ,, மன்னார்குடி S. S. ராஜகோபாலாசாரியர் ஸ்வாமி, பம்பாய்.
12. ,, K. S. தேசிகாசாரியர் ஸ்வாமி, அட்வகேட், மயிலை.
13. ,, N. கோவிந்தராஜய்யங்கார் ஸ்வாமி, சீப் என்ஜினீயர், ராயப்பேட்டை.
14. ,, தே. ஸுந்தரவரதாசாரியர் ஸ்வாமி, மானேஜர், எவ்வரிமேன்ஸ் ப்ரஸ், 1, மக்ளீன் தெரு, மதராஸ்.
15. ,, பா. தேசிகாசாரியர்ஸ்வாமி, 145, சைனபஜார்ரோட், சென்னை,
16. ,, K.C. வரதாசாரியர்ஸ்வாமி, புரொபஸர் ஆப் பிலாஸபி, திருப்பதி
17. ,, ரங்கஸாமி அய்யங்கார் ஸ்வாமி, திருப்புட்குழி.
18. ,, வி. தேசிகாசாரியர் ஸ்வாமி, 'அம்புஜ விலாஸ்,' மைலாப்பூர். இவர் ரூபாய் 15 உதவி யிருக்கிறார்.

॥ ஸ்ரீ: ॥



॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

# ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ

(ஓர் மாதப் பத்திரிகை)

ஜீயந்நம் ஜகதாம் ஜீயாத் கீர்த்திர்யஸ்ய சதுர்த்திஶம் ।
ஸ்வஸ்த்யஸ்து ஸர்வதந்த்ரஜ்ஞ வேங்கடேஶாய ஸ்வாமினே ॥

## மாதக் குறிப்புகள்.



| ஸம்புடம் | பிரமாதிஸு | ஸஞ்சிகை |
|---|---|---|
| 2. | ஆவணி மீ | 8 |

### "கண்ணனுக்கே யாமது காமம்"

உலகத்தில் காமம் என்று சொல்லப்பட்ட ஆசையில்லாதார் இல்லை. ஆசையை நமது முன்னோர்கள் இருவகையாக வகுத்தார்கள். விரும்பிப்பெறவேண்டிய ஆசை ஒன்று, முற்றிலும் விலக்கவேண்டிய ஆசை மற்றொன்று. எம்பெருமான் பக்கல் ஆசையை விரும்பிப் பெறவேண்டும், விஷய சுகங்களுக்கு ஏற்படும் ஆசையை ஒழிக்கவேண்டும். இந்திரியங்களுடைய அமைப்பால் விஷயங்களிடத்தாசை போவென்றால் போவதில்லை, எம்பெருமானிடத்தில் ஆசை வாவென்றால் வருவதில்லை எம்பெருமான் விஷயத்தில் ஆசை வருவது எவ்வளவு கஷ்டம் என்பது அதை விரும்புவோருக்கே தெரியும். அந்த ஆசை வந்துவிட்டால் பிறகு விஷய சுகங்களிலாசை தானாக நழுவிவிடும். விஷய சுகங்களிடம் ஆசை ஒழிந்தால்தான் எம்பெருமானிடத்தில் ஆசை உண்டாகும். இது அன்

யோன்யாச்ரயம் (ஒன்றை ஒன்று பற்றியது) என்பதான ஒரு தோஷம் (கலியாணம் ஆனால்தான் பித்தம் தெளியும், பித்தம் தெளிந்தாலொழிய கலியாணமாகாது என்பதுபோல்).

இந்த தோஷம் நிவ்ருத்தமானது எம்பெருமான் கண்ணனாய் அவதரித்தபோது. ஸங்கங்களெல்லாம் கண்ணன்விஷயமான ஸங்கங்களாய் இந்திரியங்கள்போகும் போக்கில் ஆசைக்கு விஷயமாய் அமைந்தன, அப்போது ஆசை பரிசுத்தமாகியதுடன் விரும்பிப் பெறவேண்டிய ஆசையாயிற்று. கண்ணனவதரித்துத்தான் 'காமம்' என்பது உண்மையான புருஷார்த்தமாயிற்று, 'காமாத் கோபியஃ' காமத்தின் வழிநின்ற கோபிகளும் பெறற்கரிய மோக்ஷத்தைப் பெற்றார்களன்றோ? அதற்கு முன்பு ப்ரஹ்லாதாழ்வானைப்போன்ற வெகு சிலருக்குத்தான் 'அவிவேகிகளான ஸம்ஸாரிகள் எந்த ஆசையை விஷம விஷயங்களில் வைத்திருக்கின்றனரோ அதே ஆசை உன் விஷயமாக எனக்கு ஏற்படவேண்டும்' என்று வேண்டும்படியான மனோபாவம் வாய்த்தது. கண்ணனையொழிந்த எம்பெருமானுடைய ஏனைய அவதாரங்களெல்லாம் உலகப் பற்றுவிடாத ஸாதாரண ஸம்ஸாரிகளுக்கு பகவத் காமத்தை விளைவிக்கவில்லை. ராமாவதாரங்கூட பெருங்குடியிற் பிறந்தமையாலும் நெறிதவறாத நேர்மையாலும் ரூபத்தை மறைக்கும் குணத்தின் பெருமையாலும் சில மஹரிஷிகளுக்கும் தர்மாத்மாக்களுக்கும் பயன்பட்டதேயன்றி இந்திரிய கிங்கரர்களை பகவத்கிங்கரர்களாக மாற்ற வல்லமை பெறாது போயிற்று. பெருமானை புகழவந்த ஸாமான்ய நகரவாஸிகளும் 'பஹவோ ந்ருப கல்யாண குணாஃ' என்று அவன் குணத்தில் ஈடுபடும்படியான அளவிலன்றோ ரூபம் மறைந்திருந்தது. அவ்வவதாரத்தில் 'ரூபஸம்ஹனனம் லக்ஷ்மீம்' என்றும் 'கந்தர்ப்ப இவ மூர்த்திமான்' என்றும் ரூபத்தை புகழ ஏதோ சில ஜிதேந்திரியர்களுக்குத்தான் ஸாத்தியமாயிற்று. ரூபத்தைமட்டும் உபாஸித்தால் சூர்ப்பணகை பட்டபாடு படவேண்டிவரும். கண்ணனவதாரமோ 'அத்புதம் பாலகம்' என்ற பிறந்த வர்ணனையோடு 'ஏஹிஏஹி புல்லாம்புஜபத்ரநேத்ர' என்ற யுத்தகள வர்ணனையோடு வாசியற எப்பொழுதும்வடிவழகையேவற்புறுத்துவதாய் ஞானம், கல்வி, சீலம் முதலிய பெருமையிலாத சிறுமனிசரையும் வசீகரித்து, அவர்களுடைய இந்திரிய ஸங்கங்களுக்கு இலக்காகி அவர்களுடைய ஆசைக்கு விஷயமாவது. இவ்வவதாரத்தில் குலம் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று, ராமாவதாரத்தில் ரூபம்போல. 'அழகுகண்டு என்மகளயர்க்கின்றதே' யென்றும் 'ஆயன் வேயினுக் கழிகின்றதுள்ளம்' என்றும், 'உலகளந்தான் வாயமுதம்' என்றும் 'பங்கயம் நல்ல கருப்பூரமும் நாறிவர' வென்னும் 'உன்தன் மார்வு தழுவுதற்காசை' என்றும் முறையே கண், காது, நாக்கு, மூக்கு, உடல் என்றும் ஐம்பொறிகளுக்கும் இன்பத்தைமூட்டி ஆசையை வளர்த்த



தை இவ் வவதாரத்திற் போல் வேறெங்கு காணலாம்? ஏனைய அவதாரங்கள் இந்திரிய நிக்ரஹம் செய்தவருக்கே ருசிக்கும். இவ் வவதாரம் இந்திரிய கிங்கரருக்கே ருசிக்கும். கண்டவர்கள் கைகுவிக்கும் தெய்வம் ராமனென்றால் கண்டவர்கள் காதலிக்கும் தெய்வம் கண்ணன். சரண்ய தேவதை சக்ரவர்த்தித்திருமகனென்றால் நம் ஐயறிவும்கொண்டு நம்மையாளும் நாதன் நந்தகோபன் குமரன், ராமனை அணுகி அடைக்கலம்பெறலாம், கிருஷ்ணனை அடைந்து ஆனந்தம் அனுபவிக்கலாம். ஆகவே கண்ணனுக்கே யாமது காமம்.

—தி. ராமஸ்வாமி தாஸன்.

# ஸாமரஸ்ய ரஹஸ்யம்.

(ஸம்பாதகர்.)

ஸ்ரீதேசிக ஸார்வபௌமன் 'ஸாமரஸ்யம்ஹி ஸாயுஜ்யம் வதந்தி ப்ரம்மவாதிநஃ' என்று சாகடாயனும் சொன்னான். ஸாயுஜ்யமாவது ஸயுக்காவான் ஒரு போக்யத்திலே போக்தாவாய்க் கொண்டுகூட அன்வயிக்குமவன்" என்று அருளிச்செய்தார் (அனுபவிக்கக்கூடிய ஒரு வஸ்துவை ஒருவருடன் மற்றொருவர் அனுபவிப்பது ஸாயுஜ்யம் என்றும் அதைத்தான் ஸாமரஸ்யமென்று ப்ரம்மஜ்ஞானிகள் சொல்லுவதாய் சாகடாயனன் என்ற நிகண்டுகாரர் சொன்னதாக அருளிச்செய்தபடி, வேதத்தில் ஸாயுஜ்யமென்றும் ஸார்ஷ்டிதையென்றும் பிரித்துச் சொல்லுமிடத்தில் ஸ்ார்ஷ்டிதையென்பது ஒரு வஸ்துவை இருவர் அனுபவிப்பதில் வாசியில்லாமலிருப்பது என்று "ஸார்ஷ்டிதாதத்ர போகஸ்ய தாரதம்ய விஹீநதா" என்ற காரிகையினால் நிஷ்கர்ஷித்தார். இதனால் ஸாயுஜ்யத்தில் அடக்கிய ஸார்ஷ்டிதைதான் ஸாமரஸ்யமெனத் தேறியது. சாகடாயனர் சொன்னபடி ப்ரம்மவாதிகளான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸாமரஸ்யமென்பது முக்த தசையிற்போலிங்கும் தங்களுக்கு போக்யமான எம்பெருமானை தாரதம்யமன்னியில் சாஸ்த்ரம் அனுமதித்தபடி அனுபவிப்பதே. தற்காலம் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆலயங்களில் அச்யுதனுக்கு அடிமைசெய்வதில் அன்யோன்யம் அஸூயைகொண்டு அளவிலாத அஸஹ்யாபசாரங்களைச் செய்துவருகிறார்கள். இதைத் தடுக்க ஸ்ரீமான் திவான்பஹதூர் கோயம்புத்தூர் - ஸி. வி. வெங்கடரமண அய்யங்கார் ஸ்வாமியின் முயற்சியில் ப்ரமாதி௵ ஆடி௴

கடுஉ (30-7-39)ல் சென்னை திருவல்லிக்கேணி தவன உத்ஸவ பங்களாவில் கூடிய ஸ்ரீவைஷ்ணவர்களால் பல ப்ரமுகர்களும் பண்டிதர்களு மடங்கிய ஸ்ரீவைஷ்ணவ ஸமரஸ ஸபை யொன்று ஸ்தாபிக்கப் பட்டது. இதன் பெயருக் கிணங்க ஏற்படவேண்டிய ஸாமரஸ்யத்தைப்பற்றிப் பலர் பலபடியாகப் பேசினார்கள். பல ஸ்ரீமுகங்களும் படிக்கப்பட்டன. பத்திரிகைகளிலும் முன்பே சிலர் பகர்ந்திருக்கின்றனர். இவ் விஷயத்தில் நாம் நிஷ்கர்ஷிக்க வேண்டிய அவசியமில்லாதபடி கீழ்ச்சொன்ன ஸ்ரீதேசிகர்பெருமான் உபதேசத்தையே உபயகலையாரும் உபயோகித்தால் இச் சமரஸ ஸபையின் பயனை ஸம்பூர்ணமாய் ஸமீப காலத்திலேயே ஸம்பாதிக்கலாம். இப்போது இருந்துவரும் ஸ்ரீவைஷ்ணவர்திக்கில் சாஸ்த்ரங்களிலும் ஆழ்வார்கள் அருளிச் செயல்களிலும் அணுவளவேனும் அவகாசம் கிடைக்குமா? இப்படியிருப்பதற்கு காரணம் பூர்வாசாரியர்களால் உபதேசிக்கப்பட்டும் பல க்ரந்தங்களால் ஸ்தாபிக்கப்பட்டும்வரும் ஸம்ப்ரதாய பேதமல்ல. ஏனெனில், உலகில் நாஸ்திகனுள்பட எம்மதத்திலும் பொதுவாயிருக்கும் ஒருவரை ஒருவர் நேசிக்கவேண்டுமென்பது விசேஷித்து வைஷ்ணவமதத்தில் "சராசரங்களெல்லாம் பகவானுடைய சரீரமாகையால் அவைகளுக்கு அநுகூலமாயிருக்க வேணுமென்றும், நிற்கின்றதெல்லாம் நெடுமாலென்றும், பேசுவாரடியார்களெம் தம்மை விற்கவும் பெறுவார்களே என்றும், க்ரய விக்ரயார்ஹதசையாஸமிந்ததே என்றும் முன்னோர்கள் முதுமொழிப்படி முன்னணியில் நிற்பதால் சாஸ்திரியப் ப்ரமாணங்களில் மதிபேதத்தால் வந்த மதபேதத்தால் இல்லையென்பது மதிமான்களுக்கு விசதமாகும். ஆகவே ஆலயங்களில் சிற்சில பாத்தியங்களினால் வந்த(வை) பாதகங்களே பாதகங்களில் முக்கியமான பாகவதாபசாரங்களுக்கு மூலமான வைஷம்யத்திற்கு வேராதமேதவிர வேறல்ல. இவைகள் பரஸ்பரம் அபசாரங்களை ஒன்று நூறாயிரமாய் பாக்கின்றனவென்பதை ஒவ்வோர் ஆலயங்களிலும் பார்க்கலாம். இதன் பயனே அவாச்யர்களின் ஆலயப்ரவேசம் முதலிய ஆபத்துக்களென்பதை அபலபிக்கவொண்ணாது. திருமண்காப்பின் பேதத்தினால் வைஷம்யம்வந்ததென்பர்கள். வைஷம்யத்தினால் திருமண் பேதம் விளைந்ததேயொழிய திருமண்ணால் வைஷம்யமில்லை. அவரவர்கள் ருசிக்கும் நெற்றி முதலான அங்கங்கள் அமைப்புக்கும் தகுந்தபடி சாஸ்த்ரவிதியும் முரண்படாமல் முன்னோர் தரித்துவந்த திருமண்காப்பானது. காலக்கிரமத்தில்



ஓர் வகுப்பிலுள்ள இரண்டு பிறிவைக் குறிக்கும் குறியாகிவிட்டது. கோவில்களில் கோபுரம், ப்ராகாரம், மண்டபம், விமானம், கம்பங்கள், விளக்குகள், வாஹனங்கள், வாத்தியங்கள், பாத்திரங்கள், கொடை, சாமரம், என்றாற்போலுள்ளவைகளிலெல்லாம் இந்த திருமண்காப்பைச் சாற்றி நகாரில் கொம்பாலடிப்பதும், தீவட்டியில் நெருப்பால் எறிப்பதும், எங்களுக்கு இந்த ஸன்னிதியில் திருமண் அதிகம் உங்களுக்குக் குறைவு, அந்தக் கோவிலில் ஒரே திருமண்தான் வேறு கிடையாது என்று பெருமைபேசுவதும் எங்காகிலும் வேறு திருமண்ணிருந்தால் இடிப்பதும் செல்வாக்குள்ள விடங்களிலெல்லாம் தங்கள் திருமண்ணை வைப்பதுமே ஸம்ப்ரதாய ஸ்தாபனமென்று கொண்டு அடியேன் அடியேன் என்று சொல்லிக் கொண்டே அடிப்பதும் வைவதும், அதுகாரணமாய் அரசாங்கத்தில் அபராதம் செலுத்திச் சிறைசெல்வதும் பொருட்படுத்தாமல் பொருளைச் செலவிடுவதுமாய் பல குடும்பங்கள் பாழாயின. சாஸ்த்ரங்களில் அறிவுள்ள சேதனன் ஆத்மசுத்திக்காக பகவத் ஸான்னித்யமுள்ள திருமண்ணை பகவத் பாதாக்ருதியாக தரிக்கவேணுமென்றால் தங்கள் உடம்பில் பல விடங்களில் திருமண் தரிப்பதைச் சிறிதும் கவனியாமல் கோவிலிலுள்ள ஆனை, குதிரை, மாடுகள், மரங்கள், கோபுர வாஹனாதிகளுக்கும், திருமண்ணை அடிப்பதற்கு ஏதாவது ப்ரமாணம் காட்டமுடியுமா? (பல திவ்ய தேசங்களைவிட்டு சென்னையிலிருப்பவருக்குத் தஞ்சமான மைலாப்பூர் ஸ்ரீகேசவப்பெருமாள் ஸன்னிதியிலும் ஸ்ரீதேசிக ஸன்னிதியிலுமுள்ள ஸுமார் நூறு வருஷங்களுக்கு முன்பட்ட பழைய விமானங்களையும் புது விமானங்களையும் பார்ப்பவருக்கு இதனுண்மை புலப்படும்.) கோவில்களில் எம்பெருமான்கள் நெற்றியிலும் தங்கள் திருமண்காப்பைச் சாற்றுவதினால் கலஹத்தை விளைவிக்கிறார்கள். திருவரங்கம் பெரிய கோயிலில் பெரியபெருமாள் இப்போது சாற்றிக்கொண்டிருக்கும் திருமண்காப்பை தரிக்க ஸுமார் 40 வருஷங்களுக்குமுன் ஒருவாரம் திருவாராதனமில்லாமல் உபவாஸமிருந்ததாகக் கேள்வி. இதனால் பெருமாள் திருமண்காப்பை தரிப்பது எவ்வளவு அவசியமாய் விட்டதென்பதை அறிக. என்னே கலியின் கோலாஹலம். பகவத் பாதத்தை பகவான் நெற்றியில் சாற்றுவது யுக்தமாவென்று ஆட்சேபித்து பாதாக்ருதி அல்ல, திலகத்தை ஸேவிப்பவரின் ருசிபோல் அழகுக்கு

அணிந்துகொள்கிறான் அச்யுதன் என்று ஸ்ரீதேசிகன் ஸச்சரித்ரரக்ஷையில் ஸாதித்தருளினார். இதனால் ஸேவிப்பவரின் ஸந்தோஷமே இதன் பயனென்று ஸித்திப்பதால் 'கஸ்தூரீகலிதோர்தவபுண்டதிலகம், கஸ்தூரீதிலகம் லலாடபலகே' என்றபடி ஸ்ரீரங்கத்தில் அழகியமணவாளன் (உத்ஸவர்) சாற்றிக்கொண்டிருக்கும் கஸ்தூரீதிலகத்தையே எல்லா எம்பெருமான்களுக்கும் சாற்றினால் சாஸ்த்ரவிரோதமில்லாததோடு வைஷ்ணவ உலகத்தில் கலஹத்திற்கிடமில்லாதிருக்குமே. ஸம்ஸ்க்ருதமும் தமிழுமான வேதங்களை அவ்வோ ஸந்நிதிகளில் சொல்லச்சிலருக்குத்தான் அதிகாரமென்று வரையிடுவது அவ்வேதங்களில் சொல்லப்படும் எம்பெருமானுக்கும் அவைகளை நமக்குத் தந்தருளிய ஆழ்வாராசார்யர்களுக்கும் திருவுள்ளமாயிருக்குமா வென்பதை விசால ஹ்ருதயர்களான விவேகிகள் விணர்க்கு விளக்கவேண்டும். அரசாங்கத்திற்கு பயந்து இருகலையாரும் இரண்டு பாத்திரங்களைத் திருநாராயணபுரம் ஸந்நிதியில் அநுஸந்திக்கிறார்களென்பது தென்தேசத்தாரின் கலப்பினால் இருக்கலாமே யொழிய ஆதியில் அப்படி அரசாங்கத்தார் அமைத்தது அநுசிதமாகாது. தக்ஷிணத் த்வாரகையென்னும் ராஜமன்னார்குடி (ஸந்நிதி)யில் இருகலையாரும் கைகோர்த்துக்கொண்டு வேதபாராயணமும், திவ்யப்ரபந்த ஸேவையும் பண்ணி வந்ததைப் பார்த்திருக்கிறோம். ஸ்ரீமணவாளமாமுனிகள் அங்கு 'தீர்ப்பாரை' யென்னும் திருவாய்மொழியை ஸ்ரீராஜமன்னாருக்கு ஸமர்ப்பித்ததாயும் சொல்லுவர்கள். அதுமுதல் ஸ்ரீசைலேசதயாபாத்ரத்தையும், அதற்கு முன்முதல் ஸ்ரீராமாநுஜதயாபாத்ரத்தையும் வடகலையான பட்டாசாரியாருக்குத் தீர்த்தம் முதலிய பஹுமரியாதைகள் இருக்கச்செய்தேயும், இருகலையாரும் அநுஸந்தித்துவந்ததை யாவருமறிவர். திருவத்யயன உத்ஸவத்தில் இருகலையாரும் இரண்டு கோஷ்டியாகக் கண்ணன் திருமுன்பே திவ்யப்ரபந்தத்தை உயர்ந்த ஸ்வரத்தில் ஸேவிப்பது அருகிலிருந்து அநுபவிப்போருக்கு ஓர் பெரும் விருந்தாகும். தற்போது மேற்படி ஸந்நிதியில் கலாப்ரயுக்தமான கலகத்தினால் ஏற்பட்டிருக்கும் நிலைமையை நேரில் காணலாம். அத்யயனோத்ஸவத்திற்கு அனத்யயனம் ஏற்பட்டுவிட்டது, நித்யாநுஸந்தானம், அநித்யமாயிற்று. இத்தகைய கஷ்டங்களையெல்லாம் தடுத்து நம்மிஷ்டங்களைக் கொடுத்து உதவுவதற்காக ஓர் ஸமரஸ ஸபை மூலமாக 'ஸமோஹம் ஸர்வபூதேஷு' நான் எல்லாரிடத்திலும் ஏகரூபன் என்ற ஸர்வேச்வரன் ஸங்கல்பித்திருக்கிறான் போலும். இதற்கு வியாஜபூதரான ஸ்ரீமான் C. V. வெங்கட்டரமணய்யங்கார் ஸ்வாமியின் மனோரதத்தை ஸ்ரீபார்த்தஸாரதி நடத்திவைப்பானாக.



## (மாதர்களும் மாதவனும்) மாதர் பகுதி.

நிகழும் ஆவணியில் ஜயந்தி யெனும் கண்ணன் அவதாரமஹோத்ஸவ தினம் வருகின்றது. அதுபற்றி நம் நண்பர் ஸ்ரீமான் டி. ராமஸ்வாமி அய்யங்கார் 'கண்ணனுக்கே யாமது காமம்' என்ற வியாஸத்தை ஸம்ரக்ஷிணியில் உதவியிருக்கின்றனர். இவரால் சென்ற ௵ ஸம்ரக்ஷிணியில் ஸ்த்ரீகள் பகுதி யென்று ஓர் பாகம் சிலமாதங்கள் வெளியிடப்பட்டது. அதைப்பற்றி அபிமானிகள் ஒன்றும் அறிவிக்காததினால் நிறுத்தப்பட்டது. இப்போது நம் ஸம்ரக்ஷிணி தலைமை காரியாலயம் ஸ்ரீதேசிகசரணத்தில் நாளது பிரமாதி ௵ சித்திரை ௴ அக்ஷய த்ருதீயைமுதல் நடந்துவரும் ஸ்ரீபாகவத தசமஸ்கந்த ப்ரவசனத்தில் ருக்மிணீ கல்யாணம் முதல் நமக்குத்தோன்றிய ஓர் விஷயத்தை ஸம்ரக்ஷிணியில் ஸ்த்ரீகளுக்காக வெளியிடுகிறோம். நாம் இதுவரை நினைத்திருந்தது ஸ்ரீராமாவதாரம்—காக்கை, கழுகு, வேடன், குரங்கு போன்ற தாழ்ந்த ஜாதிகளைத் தாங்கி வாழ்ந்ததுபோல ஸ்ரீக்ருஷ்ணாவதாரமும் இடையர், மாலாகாரர், கூனிபோன்றவரைக்கூடி உயற்றவந்ததென்றே. இப்போது ஆராய்ச்சிசெய்ததில் ஆய்ச்சிகள் பத்துலக்ஷம், ருக்மிணி முதலிய நாச்சிமார்கள் எண்வர், நரகாசுரன் சிறையிலகப்பட்ட பதினாறாயிரம் பெண்கள், யஜ்ஞபத்னிகள், கூனி, த்ரௌபதி என்றாற்போலுள்ள பெண்மணிகள் கண்ணனையே குழந்தையாகவும், காதலனாகவும், தைவமாகவும் பாவித்துப் பரமபுருஷார்த்தம் பெற்றார்களென்பதே பாகவதம் பத்தாவது ஸ்கந்தத்தின் ஸாரமென விளங்கிற்று. பல ஸித்தாந்திகள் பாவையர்கள், சூத்ரர்கள், பஞ்சமர்கள் முதலானவருக்கு அதே ஜன்மத்தில் பரகதி கிடையாதென்று பணித்திருக்கின்றனர். ஸ்ரீதேசிக தர்சனத்தில்தான் 'அந்தணரந்திய ரெல்லையில்நின்ற வனைத்துலகும், நொந்தவரேமுதலாக நுடங்கியனன்னியராய், வந்தடையும்வகை வண்டகவேந்தி வருந்திய நம் அந்தமிலாதியை அன்பரறிந்தறிவித்தனரே. (பிராமணர் முதல் பஞ்சமர் ஈறாக உள்ள உலகில் ஸம்ஸாரத்தில் நொந்தவராய் வந்தவரை *உவந்தவரைக் காக்க வரைதாங்கிய துவரைமன்னன் த்வரைப்படுகிறான் என்று பெரியோர் அறிந்து அறிவித்தார்க)ளென்றபடி சரண்யனை ச்ரியஃபதியிடம் சரணமடைந்தவருக்கும் அவரைச் சேர்ந்தவருக்கும் ஸத்கதி யுண்டென்பதைக் காணலாம். இதில் 'மாதர்க்குயர்ந்த யசோதை மகன்தன்னைக் காப்பிட்டமாற்றம், வார்மலிகொங்கை யசோதை மஞ்சனமாட்டியவாற்றை, மண்பகர்கொண்டானையாய்ச்சி மகிழ்ந்துரைசெய்தவிம்மாலை' என்று மெனக்கினியானை என்மணிவண்ணனைக் கன்றின்பின் போக்கினேன் என்றசோதை கழற்றிய' என்று பெரியாழ்வார் பல பதிகங்களில் அசோதை பாவனையில் அச்யுதனை அநுபவித்

*உவந்து - அவரை.

தார். இவர் திருமகளாரான ஆண்டாளும் கொண்டல்வண்ணனே தன்னை கொண்டாளும்படி முன் திருவாய்ப்பாடியில் இடைக் கன்னிகள்போல் நோன்பு நூற்றதை திருப்பாவையில் அருளிச்செய்தாள் ருக்மிணிப் பிராட்டி—

𑌯𑌰𑍍𑌹𑍍𑌯𑌮𑍍𑌬𑍁𑌜𑌾𑌕𑍍𑌷 𑌨 𑌲𑌭𑍇𑌯 𑌭𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌂 𑌜𑌹𑍍𑌯𑌾𑌮𑌸𑍂𑌨𑍍𑌵𑍍𑌰𑌤𑌕𑍃𑌶𑌾𑌨𑍍

𑌶𑌤𑌜𑌨𑍍𑌮𑌭𑌿𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌂 ।

(கமலக்கண்ணா உன் அருள்கிடையாவிடில் பட்டினியினாலிளைத்த என் உயிரை ச்ரமமின்றி விடுவேன். முன்போல் விஷம்முதலியன கொடுப்பவர் இலங்கையில் இல்லையே என்று கலைப்பின்னலை மரக்கிளையில் மாட்டவேண்டியதில்லை யென்றாள். இவள் காட்டிய வழியைப் பின்பற்றியே 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்' என்றும் அந்தணரைப்போன்ற அந்தண் மேகங்களை மேகவண்ணனிடம் தூதனுப்பியும், 'கோவலனாய் வெண்ணெயுண்ட வாயன் அண்டர்கோன் அணியரங்கனே' அணையப்பெற்றாள் ஆண்டாள். இவள் கேசத்தில் நேசங்கொண்ட அந்த ரங்கேசனும் அந்தரங்கேசனாய் கேசவனாகவன்றோ கோதையின் பக்கத்தில் இப்போதைக்கும் சேவை தருகிறான். மற்றுமுள்ள ஆழ்வார்களும் காலையிலும் மாலையிலும் கண்ணனைக் காமுற்ற கன்னிகள்தசை யடைந்து காதலிக்கின்றனர். யஜ்ஞபத்னிகள் புருஷர்கள் தடுத்தும் பொங்கிவரும் ஆறுகள் கடல் சேர்வதுபோல் கருணைக்கடலான கண்ணனிடம் வந்தார்கள். ஜாம்பவதி, ஸத்யபாமை, காளிந்தி முதலான நாச்சிமார்களும் கண்ணன் மார்வுதழுவதிலாசைகொண்டதினால் அங்கீகரிக்கப்பட்டனர். இப்படியே நரகன் சிறை யென்னும் நரகத்திலிருந்த ராஜகன்னிகளும் கண்ணனையே கணவனாக வரித்தார்கள். கூனியும் முன்னவதாரத்தில் முரண்பட்ட கூனிபோலன்றி கண்ணன் சரணங்களை சரணாகவரித்து அவனையே தழுவினாள். ஆகப் பெண்கள் காமம் கண்ணனுக்கேயாமானால் அதற்கு இடையூறு ஆர் செய்யினும் இடைப்பெண்களைப் போல் தடைப்படாமல் கண்ணனையே கடைப்பிடித்து கண்ணனை (ரக்ஷகனை) பெறுவர் என்பதில் ஐயமில்லை. இதைக் 'கண்ணனுக்கே யாமது காமம்' எனும் வியாஸமும் வற்புறுத்துகின்றது.

இப்பகுதியில் வியாஸங்கள் இரண்டு பக்கங்கள் இனி வெளிவரும்.

—(ஸம்பாதகர்.)

கவனிப்பு—சென்ற ஆடி ஸம்ரக்ஷிணியில் ராப்பர் 2-ம் பக்கம் ரூ. 5 கொடுத்துதவிய ப்ரமுகர் ஜாப்தாவில் 9 நெ. கொளத்தூர் - சக்ரவர்த்திராகவாசாரியர் ஸ்வாமி என்றும், குறிப்புகள் 53 ம் பக்கம் ஸ்ரீகோதாகல்யாணம் என்ற தலைப்பின்கீழ் 5-வது வரியில் மூன்று என்பதை எடுத்து முன்வரியில் மூன்று ஸ்ரீ அழகியசிங்கர்கள் என்றும் வாசிக்கவும்.



𑌸𑌮𑍇𑌧𑌿𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌵𑌿𑌵𑌾𑌹𑌵𑌹𑍍𑌨𑌿𑌃

𑌪𑍁𑌰𑍋𑌧𑌸𑌾 𑌪𑍁𑌣𑍍𑌯𑌕𑍃𑌤𑌾𑌗𑍍𑌰𑌿𑌮𑍇𑌣 ।

𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌵𑌰𑍍𑌤𑌶𑌿𑌖𑌾𑌕𑌲𑌾𑌪𑌃

𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 𑌨𑍀𑌰𑌾𑌜𑌨𑌮𑌾𑌤𑌤𑌾𑌨 ॥ ॥ ௮௫ ॥

ஸமேதிதஸ்தஸ்ய விவாஹவஹ்நி:

புரோதஸா புண்யக்ருதக்ரிமேண-

ப்ரதக்ஷிணாவர்த சிகாகலாப:

ப்ராயேண நீராஜநமாததாந. (85)

(ப-) புண்யக்ருதக்ரிமேண - புண்யசாலிகளில் முதன்மையான, புரோதஸா - புரோஹிதரால், ஸமேதித: - நன்றாக வளர்க்கப்பட்ட, ப்ரதக்ஷிணாவ்ருத்த சிகாகலாப: - ப்ரதக்ஷிணமாகச் சுற்றிவரும் ஜ்வாலா ஸமூஹத்தையுடைய, தஸ்ய விவாஹவஹ்நி: - க்ருஷ்ணவிவாஹாக்நி நீராஜநம் - ஆரத்திமங்களத்தை, ஆததாந - செய்தது, ப்ராயேண திண்ணம்—'ப்ராயேண ஆததாந' அநேகமாகச் செய்துவிட்டது. வேறு ஆரத்தி யெடுத்தார்கள், ஆயினும் ஸ்வாஹாதேவியோடு கூடிய அக்நியே ஸ்வயம் எடுத்துவிட்டார்.

(த-ம்.) மங்களாரத்தி யெடுத்தார், அக்நியாரத்திகள் இரண்டு தரம், புண்யசாலிகளில் முதல்வர் புரோஹிதர், முதல் ஆரத்தி அந்த முதல் புண்யவான் கையால் வளர்த்த அக்நிதேவனே ஸ்வாஹாதேவீஸகராய் ஸ்வயமாக ப்ரதக்ஷிணமாகச் சுற்றிவந்ததனால் ஏற்பட்டதுபோலிருந்தது. பின்னால் எடுத்தது அதிகப்படி. ப்ரதக்ஷிணார்சிர்விரக்நிராததே - அக்நி ஜ்வாலைகள் ப்ரதக்ஷிணமாக வருவது உத்தம மங்களம். (85)

आशास्य लाजाञ्जलिहोमभाजा

क्षेमाशिषं किंचिदशेषहृद्यम् ।

अन्योन्यमाकेकर सस्मिताङ्गा

वपश्यतामादिमदंपतीतौ ॥

ஸூத்ரம், அபந்தி - கட்டப்பட்டதோ, த்த-அந்தக்கயிறு, ஸ்தாநவசாத் - கட்டின இடத்தைப் பார்ப்பதனால், ஸம்வீத நாகேந்த்ர நிதர்சநீயாம் - கடையும் கயிறாகக் கட்டப்பட்ட வாஸுகியைப்போல விளங்கும், அபிக்யாம் - காந்தியை, ஆததே - வஹித்தது.

(தா-ம்) பிராட்டியைப்பெற கடல் கடையவேணும், கடலை யணைபோட்டடைக்கவேணும். 'யதரார்த்தம் அம்போதிர மந்தி அபந்தி ச' என்று ஸ்தோத்ரரத்ந ச்லோகமும், பதங்களும் திருவுள்ளத்திலோடுகின்றன. ஸமுத்ர மதந வ்ருத்தாந்தத்தைப் பேசுகிறார்— 'அபந்தி' என்கிற அதே பதத்தை வைப்பதால், ஸேது பந்தத்தையும் ஸூசிக்கிறார். ருக்மிணி யெழுதிய கடிதத்தில் 'சைத்ய மஹேந்த்ர ஸேனாஸமுத்ரத்தை நிர்மதனம் (கடைதல்) செய்து, என்னை மணம் புரியவேணும்' என்று எழுதினாள். கடல்கடைந்த வ்ருத்தாந்தம்போன்ற ஓர் கடல்கடைதலைச் செய்து தன்னையடைய ஆசைப்பட்டாள். பெருமாள் திருக்கையே மந்தரம்போல உந்நதமும் விசாலமுமானது. கையார் சக்கரத்தைச் சுற்றிசுற்றிச் சுழற்றுவது திருக்கை. அதனிலும் வேகமாய்ச் சுற்றும் திருக்கை. கையைச் சுற்றிக்கட்டிய கங்கணக்கயிறு வாஸுகிபோன்றது. சத்ருக்கள் பலம் (ஸைந்யம்) கடல். திருக்கல்யாணத்தை ஸேவிக்கிறவருக்கும், பழைய பாற்கடல் வ்ருத்தாந்தம் முதலியது நினைவுக்கு வருகிறது. 'ஸ்தாநவசாத்' - பெருமாள் அடைபவர், தேவீ அடையப்படுபவள். இரண்டிடத்திலும் இரண்டும் ஒன்று அங்கே பாற்கடல், இங்கே எதிரிகள் ஸேனைக்கடல். மந்தரத்திற்கு பதிலாய் பெருமாள், அங்கே கயிறு வாஸுகி, மந்தரத்தைச் சுற்றி கயிறு வாஸுகி, இங்கே கயிறே மந்தரம்போன்ற கையைச் சுற்றி கட்டியுள்ளது. வாஸுகி ஸ்தானத்தில் இங்கே கயிறு, அங்கே கயிறு ஸ்தானத்தில் வாஸுகி. 'நேத்ரம் க்ருத்வாது வாஸுகிம்' உலகத்தில் நஷ்டமான மங்களங்களெல்லாம் அநந்தோதயமாக பிராட்டி ஆவிர்ப்பவித்தவுடனே வந்தது. 'லோகாப்யுதயம் தாதும்' என்று அகல் அதையும் ஸூசிக்கிறார். (84)

समेधितस्तस्य विवाहवह्निः
पुरोधसापुण्यकृदग्रिमेण ।
प्रदक्षिणावर्त शिखाकलापः
प्रायेणनीराजनमाततान ॥



(ப-ரை.) சிக்ஷித நாட்யவேதை: - நாட்ய சாஸ்த்ரத்தை, காந்தர்வ வேதத்தை அப்யாஸம் செய்தவரால், விபாவிதம் - ஏற்பாடு செய்யப்பட்ட, உதாரக்லுப்தம் - பெரு அழகாகவும் கம்பீரமாகவும் ரஸிக்கச் செய்யப்பட்ட, த்ருஷ்டிமந: ச்ருதீநாம் - கண், மனம், காது இவை மூன்றுக்கும், ப்ரஸாதநம் - இன்பம் அளிக்கும், அதிவ்யம் - பூமியிலுள்ளோருடைய, உத்வாஹ ஸங்கீதம் விவாஹ மங்களகாலத்தில், கீதம், ந்ருத்தம், வாத்யம் மூன்றின் சேர்த்தியென்னும் ஸங்கீதம், ஆஸ்கந்தித திவ்யம் - தேவஸங்கீதத்தை அதிசயித்ததாக, ஆஸீத் - இருந்தது.

(தா-ம்.) கந்தர்வ ச்ரேஷ்டரைப்போல வித்யை பயின்றவரென்கிறார். இங்கே தேவர் ஸங்கீதத்தையும் அதிசயித்தது இந்த பூலோக ஸங்கீதமென்கிறார். 'கீதம் ந்ருத்தம் ததாவாத்யம் த்ரயம் ஸங்கீதமுச்யதே' என்று ஸங்கீதரத்நாகர ச்லோகப்படி, மூன்றும் சேர்ந்துதான் ஸங்கீதமாகுமென்பதை விளக்குகிறார். கண்ணுக்கு ந்ருத்தம், கீதவாத்யங்கள் காதிற்கு, மூன்றும் மனதிற்கு இன்பமளிக்கவென்று தீக்ஷித ருசை. (81)

लावण्यपूरं ललिताङ्गयष्टेः
कार्त्स्न्येननिर्वेष्टुमपारयन्त्यः ।
अङ्गानि वध्वाः कुलवृद्धनार्यः
प्रसाधनैरन्तरयांबभूवुः ॥

𑌲𑌾𑌵𑌣𑍍𑌯𑌪𑍂𑌰𑌂 𑌲𑌲𑌿𑌤𑌾𑌙𑍍𑌗𑌯𑌷𑍍𑌟𑍇𑌃
𑌕𑌾𑌰𑍍𑌤𑍍𑌸𑍍𑌨𑍍𑌯𑍇𑌨 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌷𑍍𑌟𑍁𑌮𑌪𑌾𑌰𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌃 ।
𑌅𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌵𑌧𑍍𑌵𑌾𑌃 𑌕𑍁𑌲𑌵𑍃𑌦𑍍𑌧𑌨𑌾𑌰𑍍𑌯𑌃
𑌪𑍍𑌰𑌸𑌾𑌧𑌨𑍈𑌰𑌨𑍍𑌤𑌰𑌯𑌾𑌂𑌬𑌭𑍂𑌵𑍁𑌃 ॥ ௮௨ ॥

லாவண்யபூரம் லலிதாங்கயஷ்டே:
கார்த்ஸ்ந்யேந நிர்வேஷ்டு மபாரயந்த்ய: -
அங்காநிவத்வா: குலவ்ருத்த நார்ய:
ப்ரஸாதநைரந்தரயாம் பபூவு:. (82)

(ப - ரை.) லலிதாங்கயஷ்டேஃ - அழகியதும் கொம்புபோன்றது மான சிறு திருமேனியின் (விக்ரஹத்தின்), லாவண்யபூரம் - அழகுவெள்ளத்தை, கார்த்ஸ்ந்யேந - முழுவதும், நிர்வேஷ்டும் - அநுபவிக்க, அபாரவந்த்யஃ - இயலாதவராய், குலவ்ருத்தநார்யஃ - குலத்தைச்சேர்ந்த முதிர்ந்த வயது ஸ்த்ரீகள், வத்வாஃ - கல்யாணப் பெண்ணின், அங்காநி - அங்கங்களை, ப்ரஸாதநைஃ - ஆபரணங்களால், அந்தராயாம்பபூவுஃ - மறைந்தார்கள், சித்ரத்தை, விச்சேதத்தை உண்டு பண்ணினார்கள்.

(தா - ம்.) குலத்திலுள்ள வ்ருத்தஸ்த்ரீகள் கலியாணப் பெண்ணைக் குளிரக் கடாக்ஷித்து ஆசீர்வதிக்கவேணும். மணப்பெண் திருமேனியைப் பார்த்து ஆசீர்வதிக்கவேணும். திருமேனியில் அவர்கள் கண்கள் விழவேணும். 'அங்கயஷ்டி' சின்ன திருமேனி. கொம்புபோன்றது. லளிதமான, அழகிய திருமேனி சிறிது. எல்லா அங்கங்களும் சேர்ந்த மொத்தத் திருமேனியின் மொத்த அழகு (ஸமுதாய சோபை) லாவண்யம் - அவயவசோபை ஸௌந்தர்யம். சிறிய திருமேனியில் மொத்த அழகு ஓர் கடலாய் அலைக்கிறது. மின்னற்கொடியாயினும் கண்ணைப்பறித்து மின்னுவதுபோல, கொடிக்கொம்பு போன்ற சிறுதிருமேனியிலிருந்து பளப்பளப்பு, அழகு கடல்போல் அலைத்துக் கண்ணைப் பறிக்கிறது. லாவண்யம் கண்ணை மறைக்கிறது. கண்மறைவை நீக்க, லாவண்யத்தை மறைக்கவேணும், குறைக்கவேணும். முத்துக்கோர்வைகளில், காந்திகள் நடுவேநடுவே பரவி ஆடி அலைத்துக்கொண்டிருப்பதால், திருமேனியில் அங்கங்கள் முழுவதிலும் நடுநடுவே வேண்டிய பளபளப்புடன் சேர்ந்து மொத்தமாக ப்ரகாசிக்கும் அழகு ஒளி லாவண்யம். 'முக்தாபலேஷுச் சாயாயா ஸ்தரளத்வமிவாந்தரா, ப்ரதிபாதி யதங்கேஷு தத்லாவண்யமிஹோச்யதே' என்று லாவண்யத்தின் லக்ஷணம். நடுவில் மின்னும் பளபளப்புகளை மின்னாமல் அந்தரம், விச்சேதம் செய்தார்கள். லக்ஷண ச்லோகப்படி அந்தரத்தில் (நடுவில்) மின்னுவதை அந்தரம் செய்தார்களென்பதைக் காட்ட 'அந்தராயாம் பபூவுஃ' என்கிறார். அழகுக்கு அழகுசெய்ய வேணுமோ? அழகை மறைக்க ஆபரணங்களிட்டார்கள். அங்கங்களை மறைத்தால் மொத்த அழகு குறைந்து, கண்கூசாமல் பார்த்து ஆசீர்வதிக்க ஆசை. 'அங்கயஷ்டேஃ' என்ற விடத்தில் 'அங்கம்'



என்பது முழு சரீரம். 'அங்காநி' என்னுமிடத்தில் அங்கம் ஓரவயவம். 'அங்கம்' என்னும் சொல்லிற்கு காத்ரம், ஸமீபம், உபாயம் (ஸாதனம்). அவயவம் முதலிய பொருள்களுண்டென்று இங்கே ரத்னமாலை ச்லோகத்தை ஸ்ரீதீக்ஷிதரெடுத்துக் காட்டினார். (82)

प्रयुज्यमानानि तयोर्यथार्हम्

मांगल्यमाल्याभर णाक्षतानि ।

प्रायेणलोकाभ्युदयं प्रदातुम्

तत्सङ्गमात्तादृशतामकांक्षन् ॥

ப்ரயுஜ்யமாநாநி தயோர்யதார்ஹம்

மாங்கல்யமால்யாபரணாக்ஷதாநி ।

ப்ராயேண லோகாப்யுதயம் ப்ரதாதும்

தத்ஸங்கமாத்தாத்ருசதாமகாங்க்ஷந் ॥ ॥ அ௩ ॥

ப்ரயுஜ்யமாநாநி தயோர்யதார்ஹம்

மாங்கல்யமால்யாபரணாக்ஷதாநி-

ப்ராயேண லோகாப்யுதயம் ப்ரதாதும்

தத்ஸங்கமாத்தாத்ருசதாமகாங்க்ஷந். (83)

(ப - ரை.) தயோஃ - தம்பதிகளுக்கு, யதோசிதம் - உசிதத்துக்குத் தக்கபடி, ப்ரயுஜ்யமாநாநி - செய்யப்பட்ட, மாங்கள்யமால்யாபரணாக்ஷதாநி - மங்களத்தையளிக்கும் மாலை, அணி, அக்ஷதை, ஆசீர்வாதாதிகள், தத்ஸங்கமாத் - இவர்கள் ஸம்பந்தத்தால், லோகாப்யுதயம் - உலகத்திற்கு மங்களத்தை, ப்ரதாதும் - அளிப்பதற்காக, தாத்ருசதாம் - மங்களமென்று உபயோகப்படுவதை, ஆகாங்க்ஷந் - ஆசைப்பட்டன, ப்ராயேண என்பது திண்ணம்.

(தா - ம்.) ஆபரணங்களை ஸமர்ப்பித்தது, அழகை மறைத்து திருமேனியைக் கண்கள் அதிகமாகக் கூசாமல் ஆசீர்வதிப்பதற்காக வென்றார்- கல்யாணப் பெண்ணிற்கு ஆபரணங்களால் அலங்காரம் செய்வது மங்களமல்லவோ? மங்களத்திற்காக அவை அவச்யம்தானே,

அழகை மறைப்பதே ப்ரயோஜன மென்றது எப்படிப் பொருந்தும் என்று ஆக்ஷேபம். அதற்குப் பரிஹாரம் கூறுகிறார், மங்களத்திற்கா கல்யாணப் பெண்களுக்குப் புஷ்பமாலைகள், அலங்காரங்கள், அக்ஷதை சேர்த்தல் முதலியது உலகத்தில் செய்துவரப்பட்டு, அவரவர்களுக்கு மங்களத்தைக கொடுக்கவேணும். அதற்காக இந்த மங்களவஸ்துக்களுக்கு மங்களத்தைச்செய்யும் சக்தி யேற்படவேணும். அந்தமங்கள மாகும் சக்தியைப் பெறுவதற்காக ஸர்வமங்களத்துக்கும் மூலதேவதை யான ருக்மிணியின் கல்யாணத்தில் தாங்கள் அவளோடு அந்வயித்து, மங்களச்சேர்த்தியைப்பெற ஆசைப்பட்டன வென்கிறார். இவள் கல் யாணத்தில் அவை ஒப்புக்கொண்டது இவளிடமிருந்து மங்களசக்தி யை தாங்கள் க்ரஹித்துக்கொள்ளத்தான்; இவளுக்கு உண்மையில் மங்களமளிக்கும் சக்தி அவற்றிற்கில்லை; ஸ்வயம் மங்கள தேவதைக்கு ஆபரணங்களைப்போலவே, மங்களங்களாலும் உண்மையில் பயனில்லை யென்கிறார். (83)

अरातिपक्षार्णव मंदराभे
हस्तेहरेर्यत्तदबन्धिसूत्रम् ।
तदाददे स्थानवशादभिख्याम्
संवीतनागेन्द्र निदर्शनीयाम् ॥

𑌅𑌰𑌾𑌤𑌿𑌪𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌣𑌵 𑌮𑌂𑌦𑌰𑌾𑌭𑍇
𑌹𑌸𑍍𑌤𑍇𑌹𑌰𑍇𑌰𑍍𑌯𑌤𑍍𑌤𑌦𑌬𑌨𑍍𑌧𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌮𑍍 ।
𑌤𑌦𑌾𑌦𑌦𑍇 𑌸𑍍𑌥𑌾𑌨𑌵𑌶𑌾𑌦𑌭𑌿𑌖𑍍𑌯𑌾𑌮𑍍
𑌸𑌂𑌵𑍀𑌤𑌨𑌾𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌨𑌿𑌦𑌰𑍍𑌶𑌨𑍀𑌯𑌾𑌮𑍍 ॥ ॥ அச ॥

அராதிபக்ஷார்ணவ மந்தராபே
ஹஸ்தேஹரேர்யத்ததபந்திஸூத்ரம்.
ததாததே ஸ்தாநவசாதபிக்யாம்
ஸம்வீதநாகேந்த்ர நிதர்சநீயாம். (84)

(ப-ரை.) அராதி பக்ஷார்ணவ மந்தராபே - சத்ருக்கள் ஸேனைகளாகிய ஸமுத்ரத்தைக் கடையும் மந்தர பர்வதம் (மத்து) போன்ற, ஹரே: ஹஸ்தே - க்ருஷ்ணன் கையில், யத்ஸூத்ரம் - எந்த மங்கள



ஜாநாநுநாதா ஜகதாம் த்ரயாணாம்
தோஷச்சிதோ துந்துபய: ப்ரணேது: (80)

(ப-ரை.) த்ருதஹேமகோணை: - தங்கக் கழிகளால் (தவிலடிக்கும் கழிகளால்), கந்தர்வமுக்யைரிவ - விச்வாவஸு முதலிய நிபுணரான கந்தர்வரைப்போல, காடவித்யை: - தேர்ந்த வித்யையை யுடைவரால், ஆஹந்யமாநா: - அடிக்கப்பட்டு, த்ரயாணாம் ஜகதாம் - மூன்று லோகங்களிலும், ஜாநாநுநாதா: - எதிரொலி பரவி, (மூன்று லோகங்களுடைய) தோஷச்சித: - தோஷத்தைப்போக்கும், துந்துபய: துந்துபி மேகங்கள், ப்ரணேது: - ஒலித்தன.

(தா-ம்.) 'த்ரிதாமா' என்றார் கண்ணனை. மூன்று உலகங்களும் அவர் வீடாகும் என்று காட்டுகிறார், ருக்மிணியின் கல்யாணம், எல்லாம் தங்கம், ருக்மம். பூரிதானம் செய்தது, ருக்மங்கள். மேளத்தைத் தட்டும் கழியும் ருக்மம். திவ்யதம்பதிகளின் சேர்த்தியை மூவுலகுக்கும் தெரிய அறிவிக்கும் சப்தங்கள், எல்லா தோஷங்களையும் போக்கும் சப்தங்கள். (80)

विभावितं शिक्षित नाट्यवेदै
रुद्वाहसङ्गीतमुदारक्लृप्तम् ।
प्रसादनं दृष्टिमनश्श्रुतीना
मदिव्यमास्कन्दित दिव्यमासीत् ॥

𑌵𑌿𑌭𑌾𑌵𑌿𑌤𑌂 𑌶𑌿𑌕𑍍𑌷𑌿𑌤 𑌨𑌾𑌟𑍍𑌯𑌵𑍇𑌦𑍈
𑌰𑍁𑌦𑍍𑌵𑌾𑌹𑌸𑌙𑍍𑌗𑍀𑌤𑌮𑍁𑌦𑌾𑌰𑌕𑍍𑌲𑍃𑌪𑍍𑌤𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌨𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌮𑌨𑌶𑍍𑌶𑍍𑌰𑍁𑌤𑍀𑌨𑌾
𑌮𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑌾𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌿𑌤 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑌾𑌸𑍀𑌤𑍍 ॥ ॥ அக ॥

விபாவிதம் சிக்ஷித நாட்யவேதை
ருத்வாஹ ஸங்கீத முதாரக்லுப்தம்-
ப்ரஸாதநம் த்ருஷ்டிமநச்ருதீநா
மதிவ்யமாஸ்கந்தித திவ்யமாஸீத். (81)

வனே. பெருமாளைப் பஜிப்பதற்கு 'ஸமாஹிதோ பூத்வா ஆத்மந்யேவ ஆத்மானம் பச்யேத்' என்றபடி ஏகாக்ரசித்தராய் இருக்கவேணும். சாந்தி, தாந்தி முதலியதும் வேணும். 'ஸமாஹித:' என்பது கடைசியாகப் படித்தது. முன்கூறியதெல்லாம் வேணும். பெருமாளை பூஜிப்பதிலும் அதிக பக்தியோடு புரோஹிதரைப் பூஜிக்கவேண்டும். இதில் துளி பக்திக்குறைவுமுதலிய தவறுதல் வந்தால் குருக்களின் அபசாரம் பெருமாளுக்கு வந்து சேரும். அதற்குப் பயந்து, அந்த முக்கியமான பூஜையைத் தானும் கூட கவனிக்க ஆரம்பித்தார். உத்தவர் முதலிய பக்தர் கூட்டத்தோடு தானும் சேர்ந்து, எல்லோரும் ஸாவதானமாய் ப்ருஹஸ்பதி ஸம்பாவனை செய்தார்களென்று ரஸம். இக்காலத்தில்போல ப்ருஹஸ்பதி ஸம்பாவனையில் லாகவமில்லை, அதில்தான் மிகக் கௌரவம். அதுதான் விவாஹத்திற்கு சிகரம்போலாகும் முடிவு என்று ஸ்வாமி நமக்கு எச்சரிக்கிறார்—'தத்தேக்ஷண:' பெருமாளால் 'இதைக்கவனி என்று கட்டளையிடும் கடாக்ஷத்தைப் பெற்று' என்று ஸ்ரீ தீக்ஷிதர் காட்டிய பொருள். உத்தவர் முதலிய பக்தர்கள் செய்வதற்கு, அக்ரூரையும் துணைகூட்டினார் இந்த பூஜையைப் பழுதில்லாமல் நிறைவேற்ற, எத்தனை பேரிருந்தாலும் வேணும் என்று ரஸம் 'தானபதி:' தானத்தில் தேர்ந்தவர். இந்த தானத்தை நீரும் கவனிக்கவேணும் என்று பெருமாள் கண் ஜாடையாய் நியமித்தாரென்று ரஸம்

आहन्यमाना धृतहेमकोणै

गंधर्वमुख्यैरिव गाढविद्यैः ।

जातानुनादा जगतां त्रयाणाम्

दोषच्छिदो दुन्दुभयः प्रणेदुः ॥

ஆஹந்யமாநா த்ருதஹேமகோணை:

கந்தர்வமுக்யைரிவ காடவித்யை: ।

ஜாதாநுநாதா ஜகதாம் த்ரயாணாம்

தோஷச்சிதோ துந்துபய: ப்ரணேது: ॥ அ௰ ॥

ஆஹந்யமாநா த்ருதஹேமகோணை:

கந்தர்வமுக்யைரிவ காடவித்யை: -





ஸாத்யத்வமாகிற க்ரியாவிசேஷம் அநுஷ்டாநகாலத்தில் த்ரவ்யப்ரதானபடியால் இங்கு விவக்ஷிதமானது ஸித்தத்வமென்பது ஸநாதந ஶப்தத்தின் தாத்பர்யம். யானையைக்கொண்டு யானையை வசப்படுத்துவதுபோல் ஸாத்யத்தைக்கொண்டு ஸித்தத்தை வசீகரிப்பது பாக்யபாக்யமென்பது த்வநிக்கிறது. ஆகையால் ஸநாதந ப்ரவசீகாரமே ஸகலதர்மங்களுக்கும் ப்ரயோஜனமென்றேற்படுவதால் யாதொருவன் ஸகலதர்மஸாராஜ்ஞனோ அவனேதான் ஸநாதநதர்மமாக நிற்பவன் என்பது ஸ்வரஸமாய் ஸித்திக்கிறதென்பது இவ்விரண்டு விசேஷணங்களின் ஆநுகூல்யத்தின் தாத்பர்யம்.

இவ்வபிப்ராயத்தை வைத்தே ஸ்ரீகீதாசார்யன் 'யோ யோ யாம் யாம் தநும் பக்த: ஶ்ரத்தயார்சிதுமிச்சதி । தஸ்ய தஸ்யாசலாம் ஶ்ரத்தாம் தாமேவ விததாம்யஹம் ॥ ஸ தயா ஶ்ரத்தயா யுக்தஸ்தஸ்யாராதநமீஹதே । லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந் ॥' என்றருளிச்செய்தார். இதனால் மற்ற தேவதைகளெல்லோரும் அவர்களுக்கென்று விஹிதமாயிருக்கும் சிற்சில கர்மங்களால்மட்டில் ஆராதிக்கப்படுகிறார்கள் என்றும் அக்கர்மங்களை ததேவதாராத பகவானிடத்தில் அர்ப்பிப்பதால் ஸகலதர்மஸாராஜ்யமும் பகவானொருவனுக்கே உபபன்னமாகுமென்றும் அவரே ஸகலகர்மங்களுக்கும் ஸமாராத்யரென்றும் அந்யதேவதைகளெல்லாம் அவருக்கு ஶரீரபூதர்களென்றும் ஸ்பஷ்டமாக்கப்பட்டது.

அநந்தரம் 'நற்பாலயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும் நற்பாலுக்குய்த்தனன்' என்றபடி ஸ்ரீராகவன் தன்னுடைச்சோதிக்கு எழுந்தருளும் ஸமயத்தில் ஸாகேதவாஸிகளாயிருந்த புல் பூண்டு முதலிய ஸகலப்ராணிகளையும் திவ்யலோகத்திற்கு அழைத்துப் போன பரமௌதார்யத்தை வர்ணிக்கிறார்—

ச. 'ஸாகேத ஜநபதஜநிதநிக ஜங்கம ததிதர ஜந்துஜாத

(க) ஸாகேத ஜனபதஜநிதநிக ஜங்கம ததிதர ஜந்துஜாத திவ்யகதிதாந தர்சித நித்ய நிஸ்ஸீம வைபவ—ஸாகேதஜநபத ஜநிதநிக - அயோத்தியா நகரிற் பிறக்குர் செல்வம் வாய்ந்த ; ஜங்கமததிதரஜந்துஜாத - எல்லா ஜங்கம

திவ்யகதி தாநதர்ஶித நித்ய நிஸ்ஸீமவைபவ'—என்று.

'ஜநபதஜநிதநிக' என்றதால் 'கேவலம் ஸ்வதாரகஸ்ய ஸர்வ விஷயவாஸிந:' என்றபடி கேவலம் ஸம்பந்தவிஶிஷ்டமான திவ்யதேஶ ஸம்பந்தமாத்ரத்தை வ்யாஜீகரித்து ஸம்ரக்ஷித்த மஹிமை குறிக்கப்பட்டது.

'திவ்யகதிதாந' என்றதால் முதலில் ஸாந்தாநிக லோகத்தில் வைத்துப் பிறகு காலக்ரமத்தில் மோக்ஷத்தைத் தந்தவிஷயம் ஸங்க்ரஹிக்கப்பட்டது. 'நித்ய' ஶப்தத்தால் இவ்விதம் ஸ்வாமியின் அநுக்ரஹத்துக்கு விஷயமானவர்களுக்கு மறுபடியும் ஸம்ஸாரபயமிராமல் அவர்களுக்கு ஏற்பட்ட வைபவம் நித்யமாகவே நிலைத்துநின்றது என்பது ஸூசிக்கப்பட்டது. தவிரவும் இப்படிப்பட்ட ஸங்கல்பஜ்ஞாநஸத்யமும் இப்போதுமட்டில் அன்று மற்றெல்லா ஸமயங்களிலுங்கூட நித்யமாய் உள்ளதென்றும் தாத்பர்யம். 'நிஸ்ஸீம' பதத்தால் பெருமாளிஷ்டத்தால் எதுவும் ஸம்பவிக்கும், அதைத் தடுப்பார் யாருமில்லையென்னும்படியான நிரங்குஶ ஸ்வாதந்த்ர்யம் விவக்ஷிதம். இதனால் இறந்த பிள்ளையைப் பிழைப்பூட்டினபடியும் சென்றுபோன யௌவனத்தைத் திருப்பிக்கொண்டுவந்த படியும் ஸ்ரீராமஸந்நிதியை நித்ய ஸந்நிதியாக்கிய பரமோதாரக ஶக்தி வெளியிடப்பட்டது. இவ்விஷயத்தை மனதில்வைத்து ஆழ்வான் 'ஸாகேதஸந்ததிஷு தஶரதநந்தநஸ்ய விந்த்யாசலாக்ர கதாநுபவிதா விஷயோபரோதா: | யோஸம்ப்ரதி ஸம்ப்ரதிபத்ய பக்தாயதே ஸஹஸா ஸ்வஸ்ய ஸந்நித்யஸம்ஸ்ரய ஸமயாவ்யதீத: ||' என்று அநுதாபப்பட்டார். தமது அபேக்ஷாப்ரவேஶிக்க இடமில்லாமலிருந்தும் அந்த அபேக்ஷையின் விகாஸத்தையே எதிர்பார்த்தவராய் அதை ப்ரார்த்திக்கிறார் போலும்.

முன் விஶேஷணத்தில் 'நித்ய' ஶப்தத்தால் ஸூசிப்பிக்கப்பட்டதை அதற்கு விவரிக்கிறார்—

ஸ்தாவரங்களுக்கும்; திவ்யகதிதாந - நற்கதியைக் கொடுத்ததால்; தர்சித நித்ய நிஸ்ஸீம வைபவ - வெளியிடப்பட்ட அழிவற்ற எல்லையற்ற பெருமைவாய்ந்தவரே;



௧. 'பவதபநதாபித பக்தஜநபத்ராராம'—என்று.

'ஸாகேதஜநபதஜநிதநிக' என்றதால் கூரத்தாழ்வான் அநுதபித்தபடி ஸ்ரீராமனுடைய விபவாவதாரகாலத்தில் அயோத்யையிலிருந்த ஜந்துக்களுக்குமட்டில்தான் நற்கதியோவென்று ஒருக்கால் ஶங்கை ஏற்பட்டால் அதை இந்த விஶேஷணத்தால் நிவர்த்திக்கிறார். ஸர்வதேஶங்களிலும் ஸர்வகாலங்களிலும் ஸ்ரீராமசந்த்ரனது திருவடித்தாமரை நிழலில் ஒதுங்கி வர்த்திப்போர்க்கு ஸம்ஸார தாபக்லேஶமே கிடையாதென்று தாத்பர்யம். இவ் வர்த்தத்தை ஸ்ரீஶாண்டில்யமும் 'ஶிதத்யாஶ்ரித்ய ஶ்ரீராமம் ஸமாயாந்து லோகாந் ஸர்வாந் நிர்பயாந் ராம்யரூபா: | ஸாதாரணம் ப்ராப்யேஷ யாத்ராஸு ஶ்ரேஷ்டே தத்ர ஸ்வாதவேதி ||' என்று ஸ்ரீதேவகீ சேஷமாய் வெளியிட்டார். 'பத்ராராம' என்பதில் ஆராம ஶப்தத்தால் நாலுபக்கங்களிலிருந்து ஸர்வஜனங்களும் வந்து தங்கள் ஶ்ரமங்களையெல்லாம் போக்கிக்கொள்ளத்தகுந்ததாய் அதிவிஸ்தாரமாயிருக்கும் ஓர் மஹோத்யாநத்தில் அதிதாபத்தால் பீடிதனானவன் ஒருவன் ப்ரவேஶித்தால் அங்கு அவனுக்கு ஸுகஸாந்த்ரமான சாயை, ஶீதமான மந்தமாருதம், ஸ்வச்சஸ்வாதுவான தீர்த்தம், ஸுகந்தமான புஷ்பம், ரஸவத்தமான பலம், முதலிய ஸகலாபேக்ஷிதங்களும் கிடைத்து அவன் ஸந்த்ருப்தனாவதுபோல் ராகாதிதோஷதுஷ்டர்களான ஸர்வாதிகாரிகளுக்கும் ஆரம்பகாலமுதல் ஸர்வகாலத்திலும் பாரமார்த்திகமாகவும் போஷகமாகவும் போக்யமாகவும் இருந்து ஹிதகரமான ஸகல ஶ்ரேயஸ்ஸுக்களை ஸாதித்துத்தந்து காலக்ரமத்தில் மோக்ஷஸாம்ராஜ்யத்துக்கும் ஹேதுவாகிறதென்று ஸூசிக்கப்பட்டது. இப்படி ஏற்படும் க்ஷேமம் எப்போதும் குன்றாமல் மேன்மேலும் நிரவதிகமாய் நித்யாபிவ்ருத்தமாய் வளர்கிறதென்பது பத்ரபதத்தால் விவக்ஷிதம். இது காரணமாகவே உன்

(க) பவதபநதாபித பக்தஜந பத்ராராம—பவதபநதாபித - ஸம்ஸாராக்நியால் தபிக்கப்பட்ட; பக்தஜந - பக்தியுள்ள ஜனங்களுக்கு; பத்ராராம - ஸுகத்தைத்தரும் உத்யானவனமே:

திருநாமம் உனக்கே தகும் என்கிற ஆஶயத்தால் பத்ர ராமபதத்தை திருப்பி ஸம்போதிக்கிறார்— க. 'ஸ்ரீராமபத்ர' என்று.

இதில் ஸ்ரீஶப்தத்தால் ஸீதா ஸம்பந்தத்வமும், ராம ஶப்தத்தால் ஸர்வாநந்தகரத்வமும், பத்ர ஶப்தத்தால் ஸர்வ க்ஷேமாவஹத்வமும் சொல்லியதாயிற்று.

ஆகையால் உன்னைத் தவிர வேறு ஆஶ்ரயமில்லையென்கிற நிஶ்சயத்தால் என்னையும் என்னுடையது யாவத்தையும் நின் திருவடியிணையடியே ஸமர்ப்பிக்கின்றேனென்கிறார்— உ. 'நமஸ்தே புநஸ்தே நம:' என்று.

இங்கு புந: ஶப்தத்தால் இதுவே எனக்கு ஸ்வரூபாநுரூப கைங்கர்யமாகையால் ஸர்வதா ஸர்வத: உன் திருவடித்தாமரையை வணங்கி வாழ நினைக்கிறேன் என்கிற தாத்பர்யம் வெளியாகிறது. பக்தியும் ப்ரபத்தியும் அநுஷ்டிக்கும் அன்பர்களின் ஸௌஹார்த்த அதிஶயத்தையிட்டு மேன்மேலும் கார்யஸம்வ்ருத்தியில் ஆதிஶயத்தை உண்டாக்குகின்றனவென்பது கருத்து.

அநந்தரம் இவ்வவதாரத்தின் விஶேஷாகாரத்தை ஒரு ஶ்லோகத்தால் ஸங்க்ரஹிக்கிறார்—

ந. 'சதுர்முகேஶ்வரமுகை: புத்ரபௌத்ராதிஶாலினே |
நமஸ் ஸீதாஸமேதாய ராமாய க்ருஹமேதினே ||' என்று.

ஆதி காவ்யாரம்பத்தில் ஜயதார்ஸ்ரீ கதாதி ப்ரதம ஶ்லோகத்தில் நித்யவிபூதி நாயகனாகிய லக்ஷ்மீநாயகன் ஶரணாகத ரக்ஷணார்த்தம் ஸீதாகாந்தனாய் அவதரித்தார் என்று சொல்லப்பட்டது.

(க) ராமபத்ர—ஹே கல்யாண ராமனே ;
(உ) நமஸ்தே - தேவரீரை வணங்குகிறேன் ; புநஸ்தேநம: - மறுபடியும் தேவரீரை வணங்குகிறேன்;
(ந.) சதுர்முகேஶ்வரமுகை: புத்ரபௌத்ராதிசாலினே, நமஸ் ஸீதாஸமேதாய ராமாய க்ருஹமேதினே—சதுர்முகேஶ்வர முகை: - பிரம்மா ருத்ரன் முதலியவர்களால்; புத்ரபௌத்ராதிசாலினே - பிள்ளை பேரன் முதலியவர்களையுடைய; க்ருஹமேதினே - க்ருஹஸ்தாச்ரமத்திலிருக்கும்; ஸீதாஸமேதாய - ஸீதையுடன்கூடிய, ராமாய - ஸ்ரீராமன்பொருட்டு; நம: - நமஸ்கரிக்கிறேன்.



இப்போது இந்த சரமஶ்லோகத்தால் இப்படி அவதரித்த மஹாபுருஷன் தன் உத்தேஶ்யத்தை எவ்விதம் தலைக்கட்டினார் என்பது ஸங்க்ரஹிக்கப்படுகிறது.

'ஸீதாஸமேதாய ராமாய க்ருஹமேதினே' என்றதால் 'அஹம் மாதா ஸர்வலோகாநாம் தேவதேவோ ஹரி: பிதா' என்றபடி ஸர்வஜகந்மாதாவான பெரியபிராட்டியாரும் ஸர்வஜகத்பிதாவானபெருமாளும் ஜாநகியும் தாஶரதியுமாயவதரித்து தங்களுடைய புத்ர பௌத்ராதிகளான சதுர்முகருத்ராதி தேவர்களையும் அவர்களுக்குட்பட்ட மநுஷ்யாதி ஸகல ஜங்கம ஜாதங்களையும் ஸ்வகார்ய போஷணத்தில் ஈடுபட்ட க்ருஹிணீ க்ருஹபதிகள்போல் அநிஷ்ட நிவர்த்தந இஷ்டப்ராபணாதி மஹோபகாரங்கள் செய்து பஹுமாநமாய் ரக்ஷித்தார்கள் என்பது நிர்தேஶிக்கப்பட்டது. இத்தால் தாய்தந்தைகள் தங்கள் புத்ராதிகளின் ரக்ஷண விஷயத்தில் எண்ணிறந்த கஷ்டங்களை ஸஹிப்பதுபோல் இவ்வவதாரோத்தேஶ்யத்தை நிறைவேற்றும் விஷயத்தில் ஸீதாதேவியும் ஸ்ரீராமபிரானும் பஹுவிதமான க்லேஶங்களுக்குடன்பட்டார்களென்பது த்வநிக்கிறது. தவிர க்ருஹஸ்தாஶ்ரமத்திலிருப்பவர்கள் ஸந்தாநவ்ருத்திக்குறுப்பான யஜ்ஞாநுஷ்டாநம் செய்யும் க்ரமத்தை யநுஸரித்து ஸ்ரீராமபிரான் ஜகத்ரக்ஷணார்த்தம் அநேக யாகங்களை ராஜவம்ஶங்களை வ்ருத்தி ஸம்பாதநம் பண்ணினார் என்பதும் ஸூசிதமாகிறது. க்ருஹஸ்தர்களுக்குமற்ற ஆஶ்ரமிகளை ரக்ஷிக்கவேண்டிய பொறுப்பிருப்பதுபோல் ராஜாக்களுக்கு ஜகத்ரக்ஷணபாரம் இருக்கிறதென்பது காரணமாகவே விஶ்வஸம்ரக்ஷணார்த்தமாக ஏற்பட்ட இவ்வவதாரத்தில் பகவான் 'விக்ரமம் ப்ராப்யாபாஜேஸத்ருஶம் ந்ருபம்' என்படி க்ஷத்ரிய குலத்தில் அவதரிக்க விசைந்தது, இதற்குமுன் பரசுராமனாக ப்ராஹ்மண குலத்திலவதரித்தபோது இவ்வித பொறுப்பு ஏற்படவில்லையென்றும் த்யோதிதம்.

ஆழ்வான் தாமருளிச்செய்த '[illegible]' என்னும் க்ரந்தத்தின் ஆரம்பத்தில்— 'யஸ்ய ஸ்ரீ [illegible] க்ருஹிணீ ... யஸ்யா ... விஹரணம் ... ||

ப்ராதிபம் யஸ்ய விஶ்வம் விஹரதி: । ஸத்தாவிஷ்டாநகம்வாதியிர வத்ஸ ஸந்தஸ்வந்தோக்ஷீப்ரஹஸ்: ॥’ என்று பலோபந்யாஸம் பண்ணியது இங்கு அநுஸந்தேயம்.

பின்பு ஸ்ரீராமபத்ர விஷயமாய்த் தாமருளிச்செய்த இந்த திவ்யஸ்தோத்ர ப்ரபந்தத்தின் ஸாரத்தைக்கூறி நிகமநம் செய்கிறார்—

க. ‘கவிகதகஸிம்ஹகதிதம் கடோரஸுகுமார கும்பகம்பீரம் । பவபயபேஷஜமேதத் படத மஹாவீர வைபவம் ஸுதிய: ॥’—என்று.

மஹாவீர்யமும் பொருந்திய ஸர்வஸ்வதந்த்ரமான ராகவஸிம்ஹத்தின் வைபவத்தை கவிதாவநவாஸியான ஸ்ரீநிஸிம்ஹத்தின் மஹாநாஶயத்துள்ளே அந்வேஷித்து யதாவத்தாய் ப்ரகாஶநம்பண்ண ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரமான கவிதார்க்கிகஸிம்ஹம்தான் ஸமர்த்தமென்பது த்வநிக்கிறது. ‘ஸுகுமாரௌ மஹாபலௌ’ என்றபடி பராக்ரம ஸௌந்தர்யங்களை ப்ரத்யக்ஷமாக்குகிற அதிமாத்ர ஸௌகுமார்யமும் அத்யந்த தைர்யமும் வாய்ந்த கதாநாயகனை வர்ணிப்பதற்கு ஆதிகவி எப்படி ஸந்தர்பாநுகுணமாய் ஸிம்ஹநாதத்தையும் கோகிலஸ்வரத்தையும் ப்ரயோகிக்கிறாரோ அப்படியே கவிதாநவாஸியான ஆசார்யனுடைய கடோர ஸுகுமார கும்பகம்பீரமாய் அமைக்கப்பெற்ற இந்த ஸ்ரீஸூக்தியில் அநுஸந்தாநாநுகுண ஶப்தஸம்பத்தி வரிவர்த்திக்கொண்டிருப்பது வைலக்ஷண்யமாகும் என்று தாத்பர்யம்.

கூரத்தாழ்வான் அதிமாநுஷஸ்தவத்தில் விஸ்மயிக்கிறபடி பிராட்டி காணமற்போனவுடன் அத்யந்த தைந்யத்தால் வருந்துவது

(க) கவிகதஸிம்ஹகதிதம் கடோரஸுகுமார கும்பகம்பீரம், பவபயபேஷஜமேதத் படத மஹாவீர வைபவம் ஸுதிய:—ஸுதிய: - நல்ல ப்ரஜ்ஞை வாய்ந்தவர்களே; கவிகதகஸிம்ஹகதிதம்-கவிதார்க்கிகஸிம்ஹம் மொழிந்த; கடோரஸுகுமார கும்பகம்பீரம் - கடினமானதும் ம்ருதுவானதுமான சப்தரசனையுடையதும்ஆழ்ந்தபாவத்தை யுடையதுமான; பவபயபேஷஜம் - ஸம்ஸார வ்யாதிக்கு மருந்தாகிய; மஹாவீரவைபவம் - மஹாவீரனாகிய ஸ்ரீராகவனுடைய மஹிமையைக் குறிக்கும் இப் ப்ரபந்தத்தை; படத - அத்யயனம் செய்யுங்கள்.



உடனே கோபாவேசத்தால் ஜகத்தைத் தொலைத்துவிடுகிறேன் என்று கர்ஜிப்பது, ஸுக்ரீவனை ஶரணமடைவது உடனே அவனுக்கு ஶரண்யனாக நின்று அவன் து:க்கத்தை நீக்குவது, ஸாகர ப்ரதிஶயநம் உடனே ஸாகரஶோஷணாரம்பம், இவ்விதமாக ஏககாலத்தில் பராக்ரமத்தையும் ஸௌஶீல்யத்தையும் வெளியிடுகிற ஸ்வாமியின் வ்யாபார விசேஷங்களுக்கிணங்க ஸந்திவந்த ப்ரக்ரியையும் கடோரஸுகுமாரஸம்பந்தியமைந்து நிற்பது ஸர்வோத்தரவைலக்ஷண்யமாகும். மேலும் ப்ராசாநப்ராஸாதி ஶப்தாலங்கார ஸமுதாயமான இந்த ப்ரபந்தத்தில் அவைகளால் அநுப்ராஸமும் அத்யந்தமாய் ப்ரகாஶிக்கப்படுவது ஸஹ்ருதய விஸ்மயாவஹமாயிருக்கும். இதை உத்தேசித்தே ஆசார்யன் தாமே ‘கம்பீர’ மென்று விசேஷித்தார்போலும். இதற்கு ஸாதகமான ஸ்ரீராமாயணத்தை ஆதிகவி தாமே ‘ஸமாஸவ்யாஸாத்யம்’ என்று ப்ரஶம்ஸித்திருப்பதும் இதற்கு நிதாநமாகவைத்துக்கொள்ள ப்ராப்தம். ஸமுத்ரத்தின் ஆஶயமான அகாதப்ரதேசங்களில் மறைந்திருக்கும் மஹாரத்நங்களை விசிஷ்டஸாமர்த்யமும் வாய்ந்தவர்கள் தேடியெடுத்து மாலையாகத் தொடுத்து மஹாராஜாக்களுக்கு உபஹாரமாய்த் தருவதுபோல் அதிமாநுஷஶக்திவாய்ந்த ஆசார்யன் ராமாயண ரத்நாகரத்தின் ஹ்ருதயத்தில் ஸ்திரமாய்நின்ற அர்த்தரத்நங்களைத் தேடியெடுத்து இந்த திவ்யஸூக்திமாலையில் ஸங்கலநம்பண்ணி ரகுவம்ஶதிலகனுக்கு ஸமர்ப்பித்தார்போலும். அல்லாத ரஸ்யங்களைப்போல் இந்த ஸ்ரீஸூக்தி காதாசித்கஸந்தோஷகமாய் மட்டுமிராமல் திவ்யௌஷதம்போல் ஶாஶ்வதமான ஶ்ரேயஸ்ஸுக்கு முதற்படியாகுமென்கிறார் ‘பவபயபேஷஜம்’ என்றதால். ‘ய: படேத் ராமசரிதம் ஸர்வபாபை: ப்ரமுச்யதே’ என்று வால்மீகி பகவாந் பலோபந்யாஸம் செய்திருப்பது இங்குமுள்ளதென்று தாத்பர்யம். ஸம்ஸாரபயத்தைப் போக்கும் மருந்து என்றதால் ஸாக்ஷாத் ஸம்ஸார நிவர்த்தநோபாயமாய் வேதாந்தங்கள் விதிக்கும் பக்தியோகத்தில் அதிகரிக்க ஶக்தியற்று நிற்கும் அகிஞ்சநர்களுக்கு நாம் எவ்விதம் கரைகாணமாட்டுவோமென்று ஏற்பட்டுள்ள பயத்தை—

'ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே । அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம ॥' என்றும், 'மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந । தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேதத் அகர்ஹிதம் ॥' என்றும் பலவாறான ப்ரதிஜ்ஞைகளால் நிரஸநம் செய்யும் மஹாபுருஷனுடைய சரணாகத ஸம்ரக்ஷணமாகிற மஹாவ்ரதத்தை ஸ்பஷ்டமாய் நிஸ்ஸம்சயமாய் ப்ரதிபாதநம் பண்ணும் பரமோபகாரம் இந்த வ்யபதேசத்தால் நிர்வஹிக்கப்படுகிறதென்பது நிர்தேசிக்கப்பட்டது.

'பேஷஜ' என்றதால் இது ஆகாரத்தில் ஸங்க்ஷிப்தமாயிருந்தாலும் விசல்யௌஷதம்போல் வீர்யவத்தரமென்பது த்யோதிதம். '[illegible]' என்றதால் ராமாயணத்துக்குப்போலவே கேவலம் ஶப்தராசி க்ரஹணமும் கதாவ்ருத்தியுமே ஸௌபாக்யமாகும் என்பது ஸூசிப்பிக்கப்பட்டது.

உபக்ரமத்தில் 'மஹாவீர' என்று ஸம்போதித்ததற்கு அநுரூபமாகவே உபஸம்ஹரிக்கிறார் 'மஹாவீரவைபவ' என்று. இதனால் ஸகலவித்திருமகளிடம் மற்றெல்லாக்குணங்களுக்கும் மேல் தலையெடுத்து நிற்கும் குணவிசேஷம் அவரது நிரதிசய வீர்யமே என்றும் அதுவே உத்க்ருஷ்டியனுக்கு ப்ரயோஜன லக்ஷணமாகையால் இவ்வவதாரத்தில் ப்ராதான்யமாய்க் கைக்கொள்ளப்பட்டதென்றும் தாத்பர்யம். 'கோ ந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந் கஶ்ச வீர்யவாந்' என்று வால்மீகி பகவான் நாரத மஹர்ஷியை ப்ரதமத்தில் ப்ரச்நம் பண்ணும்போது வீர்யத்தையே குண ஸங்க்யாநத்தில் முதன்மையாயெடுத்துக் குறித்திருப்பதாலும் இது ஸித்திக்கிறது. பவபூதி முதலிய மஹாகவிகளும் 'மஹாவீரசரிதம்' இத்யாதியான வ்யவஹாரங்கள் செய்திருப்பதும் இதற்கு நிதர்சனமாகும். வைபவ ஶப்தத்தால் விபவாவதார மஹாத்ம்யம் இந்த ஸ்தோத்ரத்துக்கு விஷய ஸூசிதமென்பதும் ஸூசிக்கப்பட்டது. இத்தால் இந்த ஸ்துதி ப்ரபந்தத்துக்கு ஸாக்ஷாத் ப்ரதிபாத்யமான அவதாரவிசேஷம் விபவாவதாரத்துக்கு ஸமானமென்பதும் த்வநிக்கிறது.



போல் இந்த ஊஹத்தைச் சேர்க்கலாம் தர்கம் என்பதாக ஒரு ஊஹம் உண்டு. அதை அநுமாநாத்யாயத்தில் சொல்லப்போகிறோம்.

ப்ரத்யக்ஷம், அநுமானம், சப்தம், என்பதாக ப்ரமாணமானது மூன்றுவிதம்.

(ச்லோ.) 'தர்மங்களைப் பற்றிய தெளிவை விரும்புமவன் ப்ரத்யக்ஷம் அநுமானம், ச்ருதி ஸ்ம்ருதி என்றுப்போல் பலவிதமாயுள்ள ஆகமரூபமான சாஸ்த்ரம், இம்மூன்றையும் நன்றாக அறியவேண்டும்' என்று மநுபகவானும் சொன்னார்.

(ச்லோ.) 'ப்ரத்யக்ஷம் அநுமானம், சாஸ்த்ரம், இவைகளால் உண்டாகும் ஞானங்கள் மூன்றும் த்யானத்திற்குக் காரணமாகும்' என்று சௌனக பகவானும் சொன்னார். (அர்ச்சாவதாரத்தைப் பற்றிய ப்ரத்யக்ஷமும். அர்ச்சாவதாரத்தைக் கொண்டு இந்த ஹேதுவினால் ராம க்ருஷ்ணாதி விபவாவதாரங்களை அநுமானம் செய்வதும், பரவாஸுதேவ விக்ரஹம் முதலியதை சாஸ்திரத்தைக்கொண்டு தெளிவதும் த்யானத்திற்குக் காரணமாகும் என்கை.)

ஸ்ரீபாஷ்யகாரரும் ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்கள் மூன்றையும் அவ்வோ சப்தத்தினால் சொல்லிவிட்டுப் பிறகு 'ப்ரமாணங்களின் எண்ணிக்கையைப்பற்றி வாதிகளுக்கு விவாதம் இருந்தபோதிலும் எல்லோரும் இசைந்த ப்ரமாணங்களும் ஏதேனும் ஒரு தர்மத்தோடு கூடிய வஸ்துவையே தெரிவிக்கின்றன, ஆகவே யாதொரு தர்மமும் இல்லாத வஸ்துவானது ஒரு ப்ரமாணத்தினாலும் ஸித்தியாது' என்பதாக மற்ற ப்ரமாணங்களை அநுவாதம் செய்தார். 'எல்லோரும் இசைந்த பிரமாணங்களுக்கு' என்பதுவும் பிறர் இசைந்திருப்பதையே தோற்றுவிக்கின்றது. அங்கு ப்ரதிவாதியான அத்வைதி ஆறு ப்ரமாணங்களை இசைந்தவன் அன்றோ. ப்ரத்யக்ஷம் அநுமானம் சப்தம் இவை மூன்றுக்குமே ஒன்றுக்கொன்று வித்யாஸத்தை வேதார்த்த ஸங்க்ரஹத்திலும் ஸ்பஷ்டமாக நிரூபணம் செய்தருளினர்.

'மத்தஸ்ஸ்ம்ருதிர் ஜ்ஞான மபோஹநஞ்ச' (ஒரு வஸ்துவைப் பற்றிய நினைவும், ப்ரத்யக்ஷம் முதலிய ஞானமும், அதற்கு நாசமும் என்னால் ஏற்படுகிறது) என்கிற விடத்தில் 'ஞானமாவது இந்திரியம் அநுமானம் சப்தம் யோகம் இவைகளால் உண்டாகுமதாய் ஒரு பொருளைப் பற்றியதாயுமுள்ள நிச்சயம்' என்று பாஷ்யம் இருக்கிறதே இங்கு யோகத்தினால் உண்டாகும் ப்ரத்யக்ஷத்தைத் தனியாகச்

சொன்னது எதற்காக வெனில் இந்த ப்ரத்யக்ஷமானது முக்யமாகை யால் அப்படி சொல்லியது.

இது ப்ரத்யக்ஷத்தைச் சேர்ந்தது என்பதை சொல்லப்போகி றோம். 'ப்ரமாணஸங்க்யா விவாதேபி' (ஸ்ரீ.பா.ஜி.அ.) (பிரமாணங் களின் எண்ணிக்கையில் விவாதம் இருந்தபோதும்) என்கிற விடத்தில் ப்ரமாணங்கள் மூன்று என்பதை ஸ்ரீபாஷ்யத்தில் சொல்லியிருக்கி றது என்பதாக எங்களாழ்வானும் ப்ரமேய ஸங்க்ரஹத்தில் சொன் ஞர்.

எல்லா ஞானங்களும் உண்மையானவை என்பதாக யதார்த்த க்யாதியை ஸித்தாந்தம் செய்யுமிடத்தில் (ஸ்ரீ.பா.ஜி.அ) ஸ்ரீபாஷ்ய க்ரந்தங்கள் சிலவற்றில் இவ்வாறு பாடம் காணப்படுகிறது. அதா வது—'அல்லது பலவிதமாய் இந்த உபபாதனம் எதற்காக? ப்ரத்ய க்ஷம், அநுமானம், சப்தம் என்கிற ப்ரமாண ஸமுதாயத்தை இசைந் துள்ளோம். வேதத்தினாலே அறியப்படுமதாய், தோஷங்களின் வா ஸனையொன்றுகூட இல்லாததாய், மேன்மைக்கு எல்லையிலாத அனந்த நற்குணக்கூட்டம் உடையதாய், எல்லாவற்றையும் அறியுமதாய், தன் ஸங்கல்பம் வீணாகாததாயுமுள்ள ப்ரம்மத்தையும் இசைந்துள்ளோம். இப்படிப்பட்ட நமக்கு எதுதான் ஸித்தியாது. எது உபபன்னமா காது' என்றாப்போல் அந்த ஸ்ரீ பாஷ்ய பாடம். (இதனாலும் பிரமா ணங்கள் மூன்று என்று ஏற்படுகிறது).

(பூ.) உண்மையாயுள்ள ஸ்மரணத்தை ப்ரமாணம் என்று சொல் லப்போகிறோமே. ஆகவே ப்ரமாணங்கள் மூன்றே என்பது எப்படி எனில்? (ஸி.) ஆயினும் ஸ்மரணமானது ப்ரத்யக்ஷம் முதலியவை களால உண்டாகின்றது ஆகையால் அவைகளைக்காட்டில் இதற்கு யாதொரு விசேஷமுமில்லை. இதனால் இதைத் தனியாக சொல்ல வில்லை.

பட்டர் ஸாதித்தருளின தத்வரத்னாகரம் எனும் க்ரந்தத்திலும் 'ப்ரத்யக்ஷம் முதலியவைகளால் உண்டாகும் ஸ்மரணங்கள் தங்களு க்குக் காரணங்களாயுள்ள ப்ரத்யக்ஷம் முதலியவற்றில் அடங்கியவை என்கிற தாத்பர்யம்கொண்டு ப்ரமாணங்கள் மூன்று என்பதற்கு விரோதம் இல்லை. ப்ரமாணங்கள் நான்கு என்பதற்கும் வேதத்திலு ள்ள வசனமானது முன்பு காண்பிக்கப்பட்டது என்று சொல்லியிருக் கிறது. அதில் முன்பு உதாஹரித்துள்ள அந்த அநுவாத வாக்யம்



21826

என்னவெனில்—'ஸ்ம்ருதிஃ ப்ரத்யக்ஷமைதிஹ்யம், அநுமானஃ சது ஷ்டயம்' (தை.ஆ.ப். க). (ஸ்மரணம், ப்ரத்யக்ஷம், சப்தம், அநுமா னம் என்று ப்ரமாணங்கள் நான்கு) என்பதும் ப்ரத்யக்ஷம் முதலிய வற்றோடு வித்யாஸமன்றியில் ஸ்மரணத்தையும் வேதத்தில் சொல்லி யிருக்கிறது—என்பதுமே அந்த வாக்யமாகும்.

வரதநாராயணபட்டர் செய்தருளிய ப்ரஜ்ஞா பரித்ராணமெனும் க்ரந்தத்திலோ 'ஸ்மரணம் ப்ரமாணம் என்பதை இசையாமற்போனா லும் அவ்வோ ஞானத்திற்கு காரணம் வெவ்வேறாக இருப்பதால் ஞா னம் நான்குவிதம் என்றே சொல்லியிருக்கிறது. அதாவது—

(ச்லோ.) இந்த்ரியங்களுக்கும் வஸ்துக்களுக்குமுள்ள ஸம்பந்த மும், ஹேதுவைப்பற்றிய ஞானமும், சப்தத்தைப்பற்றிய ஞானமும் ஸஹகாரிகளால் எழுந்துள்ள ஸம்ஸ்காரமும், ஆகிய இவை ஞானங்கள் உண்டாவதற்குக் காரணங்கள் ஆகும் என்பதே அது.

அந்த க்ரந்தத்திலேயே (ச்லோ.) ஸ்வயம் ஸித்தி (தானாகத் தோன்றுவது) திவ்யம் (யோகத்தினால் ஏற்படும் ஞானம்) ப்ரத்ய க்ஷம், அநுமானம், சப்தம் என்று ஐந்து பிரமாணங்கள் ஜைமினி, வியாஸர் இவர்களுடைய மனதில் இருக்கின்றன' என்று இவ்வாறாக ஸ்வயம் ஸித்தி, திவ்யம் இவைகளைத் தனியாக நிரூபணம் செய்திருக் கிறதே? அப்படி நிரூபணம் செய்ததானது ப்ரத்யக்ஷத்திலுள்ள உட்பிரிவில் வித்யாஸத்தை அறிவிப்பதில் நோக்கமுள்ளது.

'பகவானுடைய அநுக்ரஹத்தினால் யோகிகளுக்கு உண்டாகும் ப்ரத்யக்ஷத்தை திவ்யம் என்கிறது' என்பதாக எங்களாழ்வானும் அருளிச்செய்தார்.

## ப்ரத்யக்ஷத்திற்கு லக்ஷணம்.

அவற்றில் ஸாக்ஷாத்காரரூபமாயுள்ள ஸமீசீனஞானத்தைப் ப்ரத் யக்ஷம் என்கிறது ஸாக்ஷாத்காரமாகையாவது—ஜாதி ரூபமாகவோ அல்லது உபாதிரூபமாகவோ உள்ள, ஓர் ஞானத்தின் தர்மமாகும். 'நான் இதை ஸாக்ஷாத்காரம் செய்கிறேன்' என்று தம்தம் அநுபவ மே இதற்கு ப்ரமாணம். (இப்படி ஸாக்ஷாத்காரமாகையாவது ஓர் ஜாதி என்கிற பக்ஷத்தில் லக்ஷணம் சொன்னோம், அது ஜாதி யன்று, ஜாதி யில்வேறுபட்ட உபாதி எனும் தர்மம் என்கிற பக்ஷத்தில் ப்ரத்யக்ஷத் திற்கு லக்ஷணம் என்ன வெனில்), (ச்லோ.) காரணத்தைப்பற்றிய ஞானத்தினால் உண்டாகும் ஞானங்களைக்காட்டிலும், ஸ்மரணத்தைக்

காட்டிலும் வேறுபட்டதான ஞானத்தைப் ப்ரத்யக்ஷம் என்கிறது. அநுமானம் முதலியவை அவற்றின் காரணங்களாகிய வ்யாப்தி முதலியவற்றை அறிந்தபிறகே உண்டாகின்றன. ப்ரத்யக்ஷமோ தனது காரணமாகிய இந்திரியத்தைப்பற்றிய ஞானமன்றியிலே உண்டாகின்றது, ஆகவே இந்த லக்ஷணம் கூடும். லக்ஷ்யம் சிலவற்றில் இல்லாமையும், லக்ஷ்யமல்லாததில் இருப்பதுமாகிய தோஷங்கள் இந்த லக்ஷணத்திற்குச் சொல்லமுடியாது.

ப்ரமேயஸங்க்ரஹம் எனும் க்ரந்தத்திலோ இவ்வாறு சொல்லியிருக்கிறது—'ஸாக்ஷாத்கார ரூபமாய், ஸ்மரணத்தில் வேறுபட்டதுமான ஞானத்தை ப்ரத்யக்ஷம் என்கிறது. ஸாக்ஷாத்காரமாகை என்பது ஒரு ஜாதி' இவ்வாறாக அந்த க்ரந்தம். (இதனால் ஸாக்ஷாத்காரமாகை என்பது ஒரு ஜாதி என்று ஏற்படுகிறது).

தத்வரத்நாகரமெனும் க்ரந்தத்திலும் இவ்வாறு சொல்லியிருக்கிறது. (ச்லோ.) 'ஸாக்ஷாத்காரரூபமான ஞானத்தை ப்ரத்யக்ஷம் என்கிறது. ஸாக்ஷாத்காரமாகையாவது—நாம் ப்ரவ்ருத்திக்கும் வஸ்துவைச் சேர்ந்த மற்றொரு வஸ்துவின் ஞானத்தினால் உண்டாகுமதான, ஞானத்தில் வேறுபட்ட ஞானமாகை (அக்னியில் நமக்கு ப்ரவ்ருத்தியுண்டாகின்றது. அந்த அக்னியைத் தெரிவிப்பதால் புகையும், அக்னி என்கிற சப்தமும், அதைச் சேர்ந்ததாகும். இவைகளை அறிவதினால் முறையே அநுமிதியும் சாப்தபோதமும் உண்டாகின்றன, அப்படிப்பட்டதன்று ப்ரத்யக்ஷம் என்கை), (இதனால் ஸாக்ஷாத்காரமாகை என்பது ஓர் உபாதிரூபமானது என்று ஏற்படுகிறது).

'நாம் ப்ரவர்த்திக்கும் வஸ்துவில் வேறுபட்ட வஸ்துவை அறிவதனால் உண்டாகும் ஞானத்தை பரோக்ஷம் என்கிறது. உதாஹரணம். அக்னி வேணுமென்று அதில் ப்ரயத்னம் பண்ணுகிறோம். ப்ரயத்னத்திற்கு விஷயமானது அக்னி, இதில் வேறுபட்டது தூமமும் அக்னி என்கிற சப்தமும். முறையே இவைகளை அறிவதனாலேயே அநுமிதியும் சாப்தபோதமும் உண்டாகின்றன' என்பதாக பரோக்ஷமாகையைப் பற்றியும் இவ்வாறு அந்த க்ரந்தத்தில் சொல்லியிருக்கிறது.

மானயாதாத்ம்ய நிர்ணயம் எனும்க்ரந்தத்தில் வரதவிஷ்ணுமிச்ரர் சொல்லுவதாவது—'ஸாக்ஷாத்கார ரூபமான ஸமீசீன ஞானத்தைப் ப்ரத்யக்ஷம் என்கிறது. அந்த ஞானம் ஸாக்ஷாத்காரமாகையாவது—தெளிவுள்ள ஞானமாயிருக்கை. ஞானம் தெளிவுள்ளதாகையாவது—ஒரு வஸ்துவிற்கு அஸாதாரணமாய் (அதற்கே உரியதாய்)



உள்ள ஆகாரத்தையிட்டு அவ்வஸ்துவை ப்ரகாசம் செய்கை, என்றுப் போலுள்ளது அந்த வாக்யம்.

ஸாக்ஷாத்காரமாகை எனும் தர்மமானது நித்யமென்றும் அநித்யமென்றும் இரண்டு விதம். ஈச்வரன் நித்யஸூரிகள் முதலியோர் ஞானத்திலுள்ளது நித்யம். நம்போன்றவர்களின் ஞானத்திலுள்ளது அநித்யம்.

நம் போன்றவர்களின் ப்ரத்யக்ஷமானது யோகிகளுடைய ப்ரத்யக்ஷம் என்றும், யோகிகள் அல்லாதாருடைய ப்ரத்யக்ஷம் என்றும் இரண்டு விதம். அவற்றில் யோகிகளின் ப்ரத்யக்ஷமானது அதிகமான அத்ருஷ்ட விசேஷத்தினால் உண்டாகின்றது. அது யோகதசையில் மனதினால் மாத்திரம் உண்டாகும். யோகமில்லாத தசையில் வெளி இந்திரியங்களாலும் உண்டாகின்றது. எந்த வஸ்துவை அறியவேண்டும் என்பதாக இச்சை முதலியன உண்டாகின்றனவோ அந்த வஸ்துவைப்பற்றியதாகவே இருக்கும். இந்த ப்ரத்யக்ஷமானது சாஸ்த்ரத்தைக் கொண்டே அறியப்பட்டதுமாகும். அத்ருஷ்டவிசேஷமன்றிக்கே த்ருஷ்ட ஸம்ஸ்காரத்தினால்மட்டும் உண்டாகும் ப்ரத்யக்ஷத்திற்கு ஈச்வரன் விஷயமாகமாட்டான் என்று சாஸ்த்ரயோநித்வாதிகரண ஸ்ரீபாஷ்யத்தில் அருளிச்செய்தார். மற்றொரு இடத்தில் (கீதா பாஷ்யத்தில்) யோகி ப்ரத்யக்ஷத்தை ஸ்ரீ பாஷ்யகாரரே ஸாக்ஷாத்தாக சொல்லியிருக்கிறார்.

ஈச்வரன் விஷயத்தில் யோகி ப்ரத்யக்ஷம் கூடுமாகிலும் அந்த ப்ரத்யக்ஷமானது வேதத்தினால் ஈச்வரனை அறிந்தபிறகு உண்டானதாகையால் இதற்கு மூலமாயுள்ள வேதமானது இதைப் பின்பற்றிச் சொல்லுகிறதாகமாட்டாது. அப்படி செய்வதற்கு இந்த ப்ரத்யக்ஷத்திற்கு சக்தியில்லை. அது விஷயத்தில் இது நடுநிலைமையை அடைகின்றது

குடம் முதலிய ப்ரமேயங்களை இந்திரியத்தினால் அறிவதுபோலவே தர்மம்முதலியவைகளும் ப்ரமேயங்களாகையால் அவற்றை யாரேனுமொருவர் இந்திரியத்தினால் அறியமுடியும், அல்லது நமது ஸுகம் முதலியவற்றை மீமாம்ஸகர், ப்ரத்யக்ஷத்தைக்காட்டிலும் வேறுபட்ட ஓர் ப்ரமாணத்தினாலே அறியமுடியும் என்கிறார்கள். அவை இந்திரியத்தினாலும் அறியப்படுகின்றன. அப்படியே தர்மம் முதலியவற்

றையும் அனுமானம் முதலிய ப்ரமாணத்திற்கு விஷயமாக அவர்கள் கொள்ளுவதால் அவையாரேனு மொருவருக்கு இந்திரியத்தினால் அறியப்படவேண்டும். இவ்வாறாக யோகி ப்ரத்க்ஷத்தைப் பற்றி நையாயிகர் சொல்லும் அனுமானம் ஸமீசீனமன்று. தர்மம் முதலியவை ப்ரமேயங்களேயாகிலும் இந்திரியங்களால் அறியப்படவேண்டாவே என்பதாக ஹேதுவை இசைந்து ஸாத்யத்தை இசையாவிட்டால், இதற்கு பாதகயுக்தி ஒன்றுமில்லை. சப்த ப்ரமாணம் பாதகமாகும் என்பதாக அதை முன்னிடுவதானால் அந்த சப்த ப்ரமாணமே போதுமானது, அனுமானமும் சப்தத்தினால் ஸித்தித்துள்ளதைத் தெரிவிப்பதனால் ஸித்த ஸாதனம் என்கிற தோஷமும் அதற்கு உண்டு. சப்தம் பாதகமென்பதை இசையாவிடில் தர்மம் முதலியவற்றை எவரேனுமொருவர் கண்ணால் பார்க்கலாம் என்று சொல்லும் பௌத்தனுக்கு என்ன பதில் சொல்லுவாய்?

தர்மம் முதலியவைகள் நமது ப்ரத்யக்ஷத்திற்கு விஷயங்களல்ல. ஆகையால் அவைகளைப்பற்றிய யோகி ப்ரத்யக்ஷத்தை அனுமானம் செய்கிறான் நையாயிகன். இவன் ஞானமானது மானஸ ப்ரத்யக்ஷத்திற்கு விஷயமாகிறது என்கிறான். ஆகவே தர்மம் முதலியவைகளைப் பற்றிய அனுமானமானது நமது ப்ரத்யக்ஷத்திற்கு விஷயமாகும்போது தர்மம் முதலியவைகளும் ப்ரத்யக்ஷங்களாக ஸித்திக்கின்றன. தர்மம் முதலியவற்றை அனுமானம் செய்கிறேன் என்பதாக அந்த மானஸ ப்ரத்யக்ஷம் உண்டாகிறது. அதில் தர்மம் முதலியவைகளும் விஷயமாகின்றன. இப்படி நையாயிகன் பக்ஷத்தில் தர்மம் முதலியவைகளும் நமது மானஸ ப்ரத்யக்ஷத்திற்கு விஷயங்களாகையால் வேறுபட்ட யோகி ப்ரத்யக்ஷத்தை இவன் அனுமானம் செய்வது கூடாது. (பூ.) ஆகிலும் தர்மம் முதலியவை ஒரு ஞானத்தில் விஷயங்களாய்க்கொண்டே அந்த ஞானத்தைப் பற்றிய மானஸ ப்ரத்யக்ஷத்திலும் விஷயங்களாகின்றன. நேராக நமது ப்ரத்யக்ஷத்தில் தோன்றவில்லை. ஆகவே அவை ஸாக்ஷாத்தாகவே ஒருவனுக்கு ப்ரத்யக்ஷங்களாகின்றன என்று ஸாதிக்கிறோம். அது யோகிப்ரத்யக்ஷமே எனில், (ஸி.) தர்மம் முதலியவை கண்ணால் அறியக்கூடியவை என்கிறானே பௌத்தன். அப்படியும் ஸாதிக்கலாமே. ஆகவே வேதத்தினாலேயே யோகி ப்ரத்யக்ஷம் ஸித்திப்பதாகக் கொள்ளவேண்டும்.



முன் கூறிய ஸுக்ருத விசேஷமானது யோகத்தைப் பயிற்சி செய்தல், தவம் செய்தல், முதலியவற்றால் உண்டாகிறது. ஆகையால் ரிஷிகளுடையதாகக் கொள்ளப்படும் ஞானமும் சிறந்த அத்ருஷ்ட விசேஷத்தால் உண்டானது என்பதில் வித்தியாஸமில்லாமையால் யோகிகளின் ப்ரத்யக்ஷத்திலேயே அடங்கியுள்ளது. அப்படியே ப்ரஞ்ஞாபரித்ராணம் என்னும் க்ரந்தத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

(ச்லோ.) 'இந்திரியங்களை எதிர்ப்பாராமல் பொருளைத்தெரிவிக்கும் ஞானத்தை திவ்ய ப்ரமாணம் என்பதாக ப்ரமாணங்களை யறிந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

'பகவானுடைய ஞானமும் அப்படியே மோக்ஷமடைந்தவர்களின் ஞானங்களும் ஸஞ்ஜயர், அர்ஜுனன், வால்மீகி முதலியோர் ஆர்ஷ ஞானங்களும் அந்த திவ்யப்ரமாணமாகும்' என்று அவ்வசனம்.

இந்திரியங்களை எதிர்ப்பாராதது என்பதற்கு பகவதனுக்ரஹத்தால் உண்டாகாத இந்திரியங்களை எதிர்பாராதது என்பதுபொருள். ஆகையாலேயே 'திவ்யமாயுள்ள கண்ணை உனக்குக் கொடுக்கிறேன்' என்பது போன்ற கீதாவசனம் கூறுகின்றது. அல்லது ஈச்வரன் முதலியோர் ஞானங்களோடு சேர்த்துச் சொல்லியிருப்பதால் ஸஞ்ஜயர் அர்ஜுனன் இவர்கள் ஞானங்களும் இந்திரியங்களை எதிர்ப்பாராதவை என்றே க்ரந்தகாரருடைய பக்ஷம். அடுத்தாற்போலவே இவ்வாறாகச் சொல்லியிருக்கிறது.

(ச்லோ.) 'இயற்கையாகவே எல்லாவற்றையும் தெரிவிப்பதாயுள்ள ஞானமானது கர்மவிசேஷத்தினால் தடைப்பட்டிருக்கின்றது. இந்தத் தடையைப் போக்குகின்றது திவ்ய இந்திரிய ஸம்பந்தம்.

'மோக்ஷம் அடைந்தவர்களுக்கு கர்மம் ஒழிந்துவிடுவதால் அவர்களின் ஞானங்கள் இந்திரியங்களை அபேக்ஷியாமலே இயற்கையாகவே எல்லா வஸ்துக்களையும் ப்ரகாசம் செய்விக்கின்றன.'

'எல்லாவற்றையும் அறிவதற்கு ப்ரதிபந்தகமாயுள்ள கர்மத்தின் தடைசெய்யும் சக்தியைத் தடுக்கின்றது திவ்யேந்திரியம். ரிஷிகளின் ஞானமானது திவ்யேந்திரியமாகிற மற்றொன்றின் உதவிபெற்றதாய் எல்லாவற்றையும் தெரிவிக்கின்றது' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

யோகிகள் அல்லாத நம்போன்றவர்களுக்கு மனதினால் உண்டாகும் ப்ரத்யக்ஷம் என்பது இல்லையென்று பெரியோர்களின் ஸம்பிர

தாயம். ஏனெனில் ஆத்மாவும் அதின் ஞானமும் தானாகவே ப்ரகாசிக்கின்றன. ஸுகம், துக்கம், இச்சை, த்வேஷம், ப்ரயத்னம் இவைதங்களுக்குக் காரணங்களாகக் கொள்ளப்படும் ஞான விசேஷங்களையன்றி வேறு அன்று என்பதாக வேதார்த்த ஸங்க்ரஹத்தில் நிஷ்கர்ஷம் செய்திருக்கிறது. ஆத்மாக்கள் தோன்றும்பொழுது நித்யங்களாகவும், அணுக்களாகவும் இவ்வாறாகவே நமக்குத் தோன்றுகின்றன. இப்படி சாஸ்திரங்களில் ப்ரஸித்தமானது. நான் அதைப் பார்த்தேன் என்பது போல் முன் அனுபவத்தைப்பற்றி உண்டாகும் ஞானமானது ஸ்மரணமேயன்றி ப்ரத்யக்ஷமன்று. ('ஆத்மா ஸுகம் முதலியவற்றில் வேறுபட்ட பதார்த்தங்களில் கண் முதலிய பாஹ்யேந்திரியங்களை எதிர்பாராது மனதானது ப்ரவ்ருத்திக்கின்றது என்பது கூடாது' என்பதாக சாஸ்த்ரயோனித்வாதிகரண ஸ்ரீபாஷ்ய மிருக்கின்றதே (ப்ர.ஸூ. அதி. ௩) இதனால் ஆத்மா முதலியவற்றிற்கு மானஸ ப்ரத்யக்ஷமுண்டு என்பதாக ஏற்படாது. நையாயிகரின் பக்ஷத்தை இசைந்து இப்படி சொல்லுவதாகவும் கூடும் என்று பெரியோர் ஸம்பிரதாயம்.

ஆகவே திவ்யமல்லாத புறவிந்திரியங்களால் உண்டாகும் ஞானத்தை யோகிகளல்லாதார் ப்ரத்யக்ஷம் என்கிறது. பொதுவான அத்ருஷ்டம், வெளிச்சம் முதலியவற்றை உதவியாகக்கொண்ட இந்திரியங்களால் அந்த ப்ரத்யக்ஷமானது உண்டாகின்றது. இவ்வாறான த்ருஷ்ட காரணங்களால் குறிப்பிட்ட சிலவற்றையே அது தெரிவிக்கும். காது முதலிய இந்திரியங்கள் இந்த ப்ரத்யக்ஷத்துக்கே உரிய காரணங்களாகும். இவைகள் ஐந்து ஆகையால் இவற்றால் உண்டாகும் ப்ரத்யக்ஷமும் ஐந்துவிதமாகும்.

பதார்த்தங்களோடு இந்திரியங்களுக்கு உள்ள ஸம்பந்தமானது —த்ரவ்யங்களில் இந்திரியங்களுக்கு ஸம்யோகம் எனும் ஸம்பந்தம். த்ரவ்யங்களிலுள்ள ரூபம் முதலியவற்றில் ஸம்யோகமுள்ள (த்ரவ்யத்)தைச் சேர்ந்திருப்பது எனும் ஸம்பந்தம்.

அப்படியே தத்வரத்னாகரம் எனும் க்ரந்தத்தில் சொல்லியிருக்கிறது—

(ச்லோ.) பதார்த்தங்களுக்கும் இந்திரியங்களுக்குமுள்ள ஸம்பந்தமானது ஸம்யோகமென்றும், ஸம்யோகமுள்ள வஸ்துவைச் சேர்ந்

அபலா கல்பம்

மாதவிடாய்க் காலத்தில் ஸ்திரீகளுக்குண்டாகும் "ப்ரதரம்" அல்லது "பெரும்பாடு" என்கிற ரத்தப்பெருக்கு, வெட்டைச் சூட்டினால் மர்மஸ்தானத்திலிருந்து வெண்மையான திரவப் பொருள் சிறுகச் சிறுக வெளிப்படுதல், கர்ப்பம் அடிக்கடி சிதறுண்டுபோதல் முதலிய கர்ப்பாசய சம்பந்தமான வியாதிகளை அறவே யொழிப்பதில் ஒப்புயர்வற்ற சக்தி வாய்ந்தது. 1 பாட்டில் விலை ரூ. 2 8 0

ஸித்த கல்ப மகரத்வஜா.

நரம்புத்தளர்ச்சி இளமைப்பருவத்திலுண்டான துர்பழக்கங்களினலேற்படும் அநேக விதமான வியாதிகள், வீர்யம் குறைவு, ஹ்ருதயத் துடிப்பு, இரத்தக் குறைவு, இரத்த அசுத்தம் முதலானவைகளுக்கு "அபாரசக்தி வாய்ந்த டானிக்" "ஸர்வரோக நிவாரிணி" என்று ஆயிரக்கணக்கான வைத்திய நிபுணர்களால் சென்ற 25 வருடங்களாகப் போற்றப்படுகிறது. 60 மாத்திரை ரூ. 10. 30 மாத்திரை ரூ. 5.

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி, லிமிடெட்

தபால் பெட்டி 151 மதராஸ்

ஸ்ரீ ஆண்டாள் ஜுவல்லரீஸ்

— 109, [illegible] ரோட், சென்னை. —

பட்டுகள் வைரங்கள்
வேஷ்டிகள் வைடூர்யங்கள்
புடவைகள் ரத்னங்கள்
தங்க நகைகள் வெள்ளி பாத்திரங்கள்

எந்த ரகமும் கிடைக்கும்
நயமான வேலைத்திறமை
ஸரஸமான விலை
ஒருதரம் நேரில் வந்து பாருங்கள்

வி. ராமய்யங்கார்,
கவர்னிங்டைரக்டர்

**Regd. No. M. 3343**

## ஸரஸ ஸம்வாதம்

---

**தங்கம் :** நாதா தங்கள் அன்பே அடியேனுக்கு போதும். அதிக விலையுள்ள வைர நகைகளை வாங்கி அணிவதின் பயனென்ன ?

**ராமரத்னம் :** அன்பினால் மட்டிலுமல்ல. அவைகளை நீ அணிவதற்கு வேறு காரணமும் உண்டு.

**தங் :** சொல்லக்கூடுமானால் கேட்கிறேன்.

**ரத் :** உன் குணத்திற்கு மெச்சினேன். அவ்வணிகளை அணிவதால் பிணிகள் அணுகுவதில்லையாம். தீர்க்காயுஸ்ஸைத் தருமாம்.

**தங் :** தங்களுக்கு ஆரோக்யமும், ஆயுஸ்ஸும் இருப்பதுதானே எனக்கு க்ஷேமம். ஆகையால் தாங்களே தரிக்கவேண்டும்.

**ரத் :** அவஸரப்படுகிறாயே. அவைகள் தீர்க்க ஸௌமங்கல்யத்தையும் கொடுக்குமாம். ஆகையால் அவைகளை நீ அணிந்தால் நானும் சிரஞ்சீவியாயிருப்பேன்.

**தங் :** அப்படியானால் அவைகளை வாங்கும்படி நானே வற்புறுத்துகிறேன். தாங்களும் சிறிதாவது அவைகளை அணியவேண்டும் உங்களுக்கும் அதனால் நன்மைதானே ?

**ரத் :** புருஷர்கள் பூணுவது வழக்கமல்லவே ?

**தங் :** நன்றாயிருக்கு. ராமாயணத்தில் அயோத்தியில் ஆடவர்களே அநேக ஆபரணங்களை அணிகிறார்கள் என்று வால்மீகி வர்ணிப்பதாய் பரவஸ்து ஸ்வாமி பலதடவை சொல்லக்கேட்டிருக்கிறேனே.

**ரத் :** அப்படியானால் நானும் வாங்கிக்கொள்கிறேன். தங்கத்தினிடந்தான் வைரங்கள் சோபிக்கும்.

**தங் :** ரத்னத்தோடு ரத்னம்சேருவதும் நியாயந்தான். த்ராஸம் என்னும் தோஷமில்லாமலிருக்கவேண்டுமே.

**ரத் :** அதென்ன ?

**தங் :** ஸ்ரீதேசிகன் பாதுகாஸஹஸ்ரத்தில் 5'5-வது ச்லோகத்தில் "த்ராஸ (பய) மில்லாத ஸ்ரீபாதுகையின் ரத்னங்கள் தேவர்களின் முடிமீதுள்ள வைரங்களோடு வைரங் கொள்கின்றன" என்கிறார்.

**ரத் :** ஸ்ரீ தேசிகனுமா இதைப்பற்றி கூறுகிறார்.

**தங் :** அந்த க்ரந்தத்தில் ரத்னங்களைப்பற்றி இருநூறுக்குமேல் ச்லோகங்களை இணைத்திருக்கிறார்.

**ரத் :** அப்படியா. நல்லது. நல்ல வைர நகைகளை நல்கும் ஸூராஜ்மல் கம்பெனிக்கு இப்பொழுதே புறப்படுவோம்.

# சூராஜ்மல்'ஸ்

நாணயத்தின் உறைவிடம்

தங்கம், வெள்ளி, நகை

— வியாபாரி —

313, எஸ்பிளநேட் - மதராஸ்.


---

எழுதி அச்சிட்டு ப்ரசுரித்தது: பரவஸ்து ஸ்ரீநிவாஸாசாரியர், 5, தேசிகசரணம் கேசவப்பெருமாள் தெற்கு வீதி. ஸம்ரக்ஷிணி ப்ரஸ், 1-13, கேசவப்பெருமாள் கீழண்டைவீதி, மைலாப்பூர், சென்னை.